# MPEDA
## நியூஸ் லெட்டர்

தொகுப்பு 1/எண். 5/ மே 2018



பக்கம் 03

**சீஃபுட் எக்ஸ்போ குளோபல் 2018 கண்காட்சியில் எம்.பி.இ.டி.எ.**

பக்கம் 24

**குவித்தலுக்கு எதிர்ப்பு: வர்த்தகத்தைக் காப்பாற்றும் கருவியா?**

பக்கம் 35

**குண்டூர் ஸ்பைஸ் பார்க்கில் திலோப்பியா மீன் வளர்ப்பு சோதனை முயற்சி**

ISSN 0245-7059


# உள்ளே...

தொகுப்பு 1 / எண் 5 / மே 2018



03

சீஃபுட் எக்ஸ்போ குளோபல் 2018 கண்காட்சியில் எம்.பி.இ.டி.எ.





13

துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்



21

மாத்ருபூமி கார்ஷிக மேளா 2018ல் எம்.பி.இ.டி.எ.

24

குவித்தலுக்கு எதிர்ப்பு: வர்த்தகத்தைக் காப்பாற்றும் கருவியா?




29

வட இந்தியாவில் முதல் இறால் தீவன மில் துவக்கம்

35

குண்டூர் ஸ்பைஸ் பார்க்கில் திலோப்பியா மீன் வளர்ப்பு சோதனை முயற்சி



40

இறால் விலை வீழ்ச்சியால் கடலுணவு ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு

இதில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் அனைத்தும் அவற்றை எழுதிய படைப்பாளிகளின் கருத்தாகும். அவை எம்.பி.இ.டி.எ. வின் கருத்துக்களல்ல. எனவே, கட்டுரைகளின் நம்பகத்தன்மைக்கு எம்.பி.இ.டி.எ. அல்லது ஆசிரியர் குழு பொறுப்பேற்காது.

**MPEDA**
தொகுப்பு 1/எண். 5/ மே 2018
**நியூஸ் லெட்டர்**

**ஆசிரியர் குழு**

**திரு. T. டோலா சங்கர், IOFS**
இயக்குனர் (மார்க்கெட்டிங்)

**திரு. B. ஸ்ரீகுமார்**
செயலாளர்

**திருமதி. ஆஷா C. பரமேஸ்வரன்**
இணை இயக்குனர் (தரக்கட்டுப்பாடு)

**திரு. P. அனில்குமார்**
இணை இயக்குனர் (மீன்வளம்)

**திரு. K.V. பிரேம்தேவ்**
துணை இயக்குனர் (எம்.பி)

**முனைவர். T.R. ஜிபின்குமார்**
துணை இயக்குனர் (அபிவிருத்தி)

ஆசிரியர்
**முனைவர். M.K. ராம்மோகன்**
இணை இயக்குனர் (மார்க்கெட்டிங்)

உதவி ஆசிரியர்
**திருமதி. K.M. திவ்யா மோகனன்**
முதுநிலை எழுத்தர்

இதழாக்க உதவி
**பிவேல்டு கார்ப்பொரேட் சொல்யூஷன்ஸ் பி லிட்.**
166, ஜவஹர் நகர், கடவந்தரா,
கொச்சி, கேரளம், இந்தியா 682 020
தொலைபேசி : 0484 2206666, 2205544
www.bworld.in, life@bworld.in

வடிவமைப்பு
**ரோபி அம்பாடி**




www.mpeda.gov.in
support@mpeda.gov.in

**கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்**

திரு. பி.ஸ்ரீகுமார், செயலாளர்,
கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்
(வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், இந்திய அரசு)
எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி நகர்,
கொச்சி - 682 036, தொலைபேசி : 0484-2311979

**வெளியிடுவது**

எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி அவென்யு,
கொச்சி - 682 036.

**அச்சகம்**

பிரிண்ட் எக்ஸ்பிரஸ்,
44/169 எ, அசோகா ரோடு,
கலூர், கொச்சி - 682 017.



**மரு. ஏ. ஜெயதிலக்**
சேர்மன்

அன்பு நண்பர்களே,

அமெரிக்க தேசிய கடல் மீன்பிடிப்புச் சேவை என்பது அமெரிக்காவின் வர்த்தகத்துறைக்கு உட்பட்டது. இது பெடரல் ரிஜிஸ்டர் நாள் ஏப்ரல் 24,2018ன்படி உருவானது. இது Inculation of Shrimp and Abalone in the Seafood Import Monitoring Programme (SIMP) என்பதன் மீதான தடையை மே 18, 2018 முதல் நீக்கியுள்ளது. இது தடை செய்யப்பட்டதற்கான காரணம் அமெரிக்காவிற்கான நீர் உயிரின வளர்ப்பின் மூலமாகக் கிடைத்த இறால் மற்றும் அபாலோன் போன்றவற்றிற்கான புள்ளிவிவரங்களும் அமெரிக்காவில் இறக்குமதி யான புள்ளி விவரங்களுக்குமிடையே வேறுபாடு உள்ளது என்பதாகும். இந்தத் தடையை நீக்கியதால் இறால் மற்றும் அபலோன் இறக்குமதியில் ஈடுபட்டுள்ளவர்கள் சில விதிமுறைகளான International Fisheries Trade Permit மற்றும் அறுவடை மற்றும் கரை சேர்ந்த விவரம் போன்றவற்றை அமெரிக்காவின் Customs and Border Protection துறைக்கு Automated Commercial environment (ACE) மூலமாகத் தெரியப்படுத்த வேண்டும். இதில் அறுவடை முதல் அமெரிக்காவின் வர்த்தகத்திற்கு அறிமுகமான இரண்டு வருடத்திற்கு விநியோகம் தொடர்பான தகவல்கள் செயலில் இருக்கும். இறால் மற்றும் அபலோனிற்கான விதிகள் டிசம்பர் 31, 2018 முதல் நடப்பில் வரும். இந்தியாவைப் பொறுத்தவரை இந்த நடவடிக்கை என்பது முக்கியமானதாகும். ஏனென்றால் நமது நாட்டின் இறால் என்பது அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் முக்கியமான வர்த்தகப் பொருளாகும். விவசாயிகளும் பதப்படுத்துவோர்களும் துவக்கம் அறிதல் தொடர்பான ஆவணங்களைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். இவை அமெரிக்காவிலுள்ள இறக்குமதி யாளர்களுக்கு அனுப்பித்தர வேண்டியதாகும். எனவே விவசாயிகள் பொருட்களின் துவக்கம் அறிதல் தொடர்பான முக்கியமான செயல்பாடுகளைப் பதிவு செய்து வைத்துக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். இவையாவும் இதர சந்தைகளான ஐரோப்பிய யூனியன் போன்றவற்றிற்கும் தேவைப்படுவதாகும். எவ்வளவோ செய்யவேண்டிய நிலையில் SIMP எம்.பி.இ.டி.எ.விற்கு அதிகப்படியான பொறுப்புகளைக் கொடுத்துள்ளது. அக்டோபர் 2018ற்குள் உட்சபட்சமான பண்ணைகளைப் பதிவு செய்யும் பணியைக் கொடுத்துள்ளது. எம்.பி.இ.டி.எ.வும் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே SIMP தொடர்பான விழிப்புணர்வு கூட்டங்களை நடத்திட திட்டமிட்டுள்ளது.

இறால் ஏற்றுமதியாளர்களை உற்சாகப்படுத்துவதற்காக மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் டி.எஸ்.2031 சான்றிதழ்களை மறு பதப்படுத்தலுக்குப்பின் மூன்றாம் நாடுகள் வழியே அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும். இறால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கிட எம்.பி.இ.டி.எ.விற்கு அனுமதி கொடுத்துள்ளது. இது ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான தற்காலிக ஏற்பாடாகும்.

அடுத்த அபிவிருத்திச் செயலாக எம்.பி.இ.டி.எ. - ஆர்.ஜி.சி.எ. ஆசியன் கொடுவா வளர்ப்பில் திறந்தவெளி குளம் முறையை உருவாக்கியுள்ளது. கூண்டு முறை வளர்ப்பைவிட இது குறைவான முதலீட்டில் செய்யக் கூடியதாகும். இந்த முறையில் மீன்களின் அறுவடையும் சிறப்பாகவே உள்ளது. எனவே விவசாயிகள் இந்த முறையைப் பின்பற்றி எதிர்காலத்தில் கொடுவா ஏற்றுமதி வர்த்தகம் வளர்ந்திட முன்வருவார்கள் என்று எம்.பி.இ.டி.எ. நம்பிக்கை கொள்கிறது.

நன்றி!

# சீஃபுட் எக்ஸ்போ குளோபல் 2018 கண்காட்சியில் எம்.பி.இ.டி.எ.




*சீஃபுட் எக்ஸ்போ குளோபல் 2018ல் இந்தியன் பெவிலியனின் தோற்றம்*

ஐரோப்பிய யூனியன் என்பது நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்களுக்கான மிகப் பெரிய சந்தையாகும். இந்திய கடல் உணவுப் பொருட்களை 2016-17 வரை ஐரோப்பிய யூனியன் 16.73 சதவீதம் வரை இறக்குமதி செய்து மூன்றாவது பெரிய சந்தையாக இருந்தது. உறைநிலை இறாலை தொடர்ந்து ஐரோப்பிய யூனியனுக்கு இந்தியா 40.66 சதவீதம் என்ற அளவில் ஏற்றுமதி செய்து வந்தது. அமெரிக்க டாலர் மதிப்பில் இது 55.15 சதவீதமாகும். அது போலவே L.vannamei இறாலும் 9.76 சதவீதம் அளவில் 11.40 சதவீத அமெரிக்க டாலர் மதிப்பில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகியிருந்தது.

சீஃபுட் எக்ஸ்போ குளோபல் என்பது உலகின் கடல் உணவுப் பொருட்களுக்காக நடத்தப்படும் மிகப்பெரிய கண்காட்சியாகும். இந்த கண்காட்சியில் சுமார் 140 நாடுகளிலிருந்து 26,000 வாங்குவோரும், விற்போரும், ஊடகங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் இந்த தொழிலில் சம்பந்தப்பட்டவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாகும். வாங்குவோரும் விற்போரும் சந்தித்துப் பேசி வர்த்தக உடன்பாடுகளை மேற்கொள்வதற்கு உகந்த இடமாக இந்த கண்காட்சி இருந்து வருகிறது. சுருக்கமாக இந்த கண்காட்சி உலக அளவிலான கடல் உணவு சார்ந்த வர்த்தகம் நடைபெறும் இடமாகும்.

இந்த கண்காட்சியை உலக அளவில் கடல் உணவுக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்யும் நிறுவனமான டைவர்சிஃபைடு கம்யூனிக்கேசன்ஸ் மற்றும் பிரிண்ட் & ஆன் லைன் மீடியாவைச் சேர்ந்தவர்கள் ஒருங்கமைத்திருந்தனர். சீஃபுட் எக்ஸ்போ குளோபல் மூலமாக 26,000 கடல் உணவு தொழில் சார்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து பலதரப்பட்ட உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவும், மிகச் சரியான வாங்குவோர், விநியோகஸ்தர்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாளர்கள், மற்றும் மொத்த விற்பனையாளர்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### கண்காட்சி

பெல்ஜியத்திலுள்ள புருசெல்ஸ்சில் ஏப்ரல் 24-26 தேதிகளில் நடைபெற்ற மூன்று நாள் கண்காட்சியில் கடல் உணவுப் பொருட்கள் தொடர்பான ஆயிரக்கணக்கான வாங்குவோரும், விநியோகம் செய்பவர்களும் உலகின் பலபாகங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். அவர்களிடையே வர்த்தகப் பரிமாற்றம் நடைபெற்றது. இங்கு திரளாக வந்திருந்த மக்களுள் இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், மொத்த வியாபாரிகள், உணவகங்கள் வைத்திருப்பவர்கள், சூப்பர் மார்க்கெட் உரிமையாளர்கள், ஹோட்டல் வைத்திருப்போர், ரீட்டெய்லர்ஸ் மற்றும் ஃபுட் சர்வீஸ் கம்பெனிகள், திட்டங்களை வகுப்பவர்கள், அரசு அதிகாரிகள், மார்க்கெட் ஆய்வு செய்பவர்கள், பகுத்தாய்வு செய்பவர்கள் போன்றவர்கள் அடங்குவர். இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருட்களும் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. பதப்படுத்தத் தேவையானவை, பேக்கிங் செய்வதற்கானவை, மற்றும் கடலுணவுச்

சந்தையில் தேவைப்படும் அனைத்தும் இருந்தன.

ஆண்டிற்கொரு முறை நடைபெறும் இந்த கண்காட்சியில் 78 நாடுகளைச் சேர்ந்த 1,946 கம்பெனிகள் தங்களது உற்பத்திப் பொருட்களைக் காட்சிக்கு வைத்திருந்தன. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் 87 கம்பெனிகள் புதிதாக இதில் பங்கேற்க வந்திருந்தன என்று இந்த கண்காட்சியின் ஒருங்கமைப்பாளர்கள் கூறினர். இந்த ஆண்டும் புதிய சாதனைகளுக்கு துவக்கம் குறிக்கும் விதத்தில் 39,322 ச.மீ. பரப்பில் அமைக்கப்பட்டிருந்தது. இது சென்ற ஆண்டைவிட 1000 ச.மீ. அதிகமாகும்.

**இந்தியாவின் பங்கேற்பு**

எம்.பி.இ.டி.எ. இந்திய பெவிலியனில் தனது காட்சிக் கூடத்தை சிறப்பான முறையில் அமைத்திருந்தது. மேலும் 19 இந்திய ஏற்றுமதியாளர்கள் தங்களது பல்வேறு விதமான கடலுணவுப் பொருட்களைக் காட்சி கூடங்களில் வைத்திருந்தனர். மேலும் 65 ஏற்றுமதியாளர்கள் எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தின் வழியே பங்கேற்றனர். இவர்களுக்கென்று தனித்தனி மேஜை இருக்கைகள் தரப்பட்டது. இவர்களில் 32 ஏற்றுமதியாளர்கள் ஆன் லைன் வழியே தங்களது இடங்களை முன்பதிவு செய்து கொண்டவர்களாவர். இந்தியன் பெவிலியன் ஸ்டால் நம்பர் 7-1633 மற்றும் 7-1733 ஆகிய இடங்களில் இருந்தது. இதன் மொத்தப்பரப்பு 480 சதுர மீட்டராகும். இந்தியப் பெவிலியனின் கருப்பொருள் Irresistible seafood from Incredible India என்பதாகும்.

எம்.பி.இ.டி.எ. பலவித வடிவங்களிலான கடல் உணவுப் பொருட்களைக் காட்சிக்கு வைத்திருந்தது. அவை உறைநிலையானவை, குளிரூட்டப்பட்டவை, உலர்த்தப்பட்டவை, உடனே உண்பதற்கு ஏற்றவை என்பவையாகும். கடலுணவுப் பொருட்களுடன் கடலுணவுப் பொருட்களைப் பற்றிய குறிப்புகளடங்கிய விளம்பரக் கையேடுகள் மற்றும் புத்தகங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டு, பார்வையாளர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் இந்த கண்காட்சியில் கலந்து கொண்ட ஏற்றுமதியாளர்களின் விவரங்கள் மற்றும் தொடர்பு முகவரியுட்படவுள்ள தகவல்களும் வர்த்தக ரீதியான பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் இந்த வர்த்தகத்தில் உள்ளவர்களுக்கு தரமான பொருட்களை வழங்கும் ஏற்றுமதியாளர்களை அதிகாரப்பூர்வமாகத் எப்போதும் தொடர்புகொள்ள முடியும்.

இந்தியக் குழுவின் உறுப்பினர்களாக திரு.டி.டோலா சங்கர், ஐ.ஓ.எஃப்.எஸ். இயக்குநர் (மார்க்கெட்டிங்), எம்.பி.இ.டி.எ. திரு.மாருதி டி யாழிகர், துணை இயக்குநர், மற்றும் தம்பட என்.விஷ்ணு, உதவி இயக்குநர் ஆகியோர் இருந்தனர். இந்தியக் குழுவினருக்கு புரூசெல்ஸ் இந்தியத் தூதரகத்தில் உள்ளவர்கள் ஆதரவாக இருந்தனர். மேலும், திரு.சந்தோஷ் குமார் சாரங்கி, இ.ஆ.ப. இணைச் செயலர், வர்த்தகத் துறை, இந்திய வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், எச்.இ.காய்திரி இஸ்சார் குமார், இந்தியத் தூதுவர், புரூசெல்ஸ்,திரு.சாராவேஷ் ராய், ஆலோசகர், இந்தியத் தூதரகம், புரூசெல்ஸ், திரு.மண்ட்லிக், துணை இயக்குநர், இ.ஐ.சி. டெல்லி, திருமதி.பிரியதர்ஷினி ரவீந்திரன், இரண்டாம் செயலர், இந்தியத் தூதரகம், புரூசெல்ஸ், ஆகியோர் எம்.பி.இ.டி.எ.வின் பிரதிநிதிகளுக்கு ஆதரவாக இருந்தனர். இவர்களது ஆலோசனை மற்றும் பார்வையாளர்களுடனான கலந்துறையாடல் போன்றவை இந்த கண்காட்சியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தில் ஏற்றுமதியாளர்களுக்கென்று தனிப்பட்ட இடம் தரப்பட்டதால் அவர்கள் தங்களது வர்த்தகக் கூட்டாளிகளுடன் கலந்துரையாடி வர்த்தத் தொடர்புகளை வலுப்படுத்த முடிந்தது. இதில் எம்.பி.இ.டி.எ.வின் அதிகாரிகளும் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தனர்.




இந்திய பெவிலியனில் ஏற்றுமதியாளர்களுக்கு எம்.பி.இ.டி.எ. இலவசமாக வழங்கிய மேஜை அமைப்பின் தோற்றம்



திரு.டோலா சங்கர் ஐ.ஓ.எஃப்.எஸ். இயக்குநர், (மார்க்கெட்டிங்) மற்றும் திரு.மாருதி யாலிகர், துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பார்வையாளர் ஒருவருடன் கலந்துரையாடும் காட்சி

இந்த கண்காட்சியில் கலந்து கொண்ட இந்திய ஏற்றுமதி யாளர்கள். வி.வி.மெரைன் புராடக்ட்ஸ், தூத்துக்குடி, நாயக் சீஃபுட்ஸ் பி.லிட். மும்பை, எச்.எல்.என்.எண்டர்பிரைசஸ், வெராவல், ரியல் எக்ஸ்போர்ட்ஸ், வெராவல், எச்.என்.இண்டிகோஸ் பி.லிட்.நவ்சாரி, அவ்லா நெட்டூஸ் எக்ஸ்போர்ட்ஸ், கொல்லம், பசுபதி அகுவாடிக், பி.லி.கொல்கத்தா, இந்தியன் எக்ஸ்போர்ட்ஸ், வெராவல், ஸ்ரீதத் அகுவாகல்சர் ஃபார்ம்ஸ், பி.லி. குஜராத், அபாத் ஃபிஷ்சரிஸ்,பி.லி. கொச்சி, காட்ரே மெரைன் எக்ஸ்போர்ட்ஸ், பி.லி.ரத்னகிரி, கல்கத்தா சீஃபுட் எக்ஸ்போர்ட்ஸ், பி.லி.கொல்கத்தா, காஸ்ட்லர்ராக் ஃபிஷ்சரிஸ், பி.லி.மும்பை, சாகர் சாம்ராட் சீஃபுட்ஸ், குஜராத், போர்ஸ்டார் ஃபுரோசன் ஃபுட்ஸ், பி.லி. மும்பை, ருபா ஃபிஷ் பி.லி.கொல்கத்தா, உல்கா சீஃபுட்ஸ், பி.லி.மும்பை, ஆகியோராவர். இது தவிரவுள்ள இந்திய ஏற்றுமதியாளர்களுக்கும் எம்.பி.இ.டி.எ. தேவையான வசதிகளை செய்து கொடுத்தது.

இந்த கண்காட்சியின் முதல் நாளில் ஏராளமான பார்வையாளர்கள்எம்.பி.இ.டி.எ.வின்காட்சிக்கூடத்தைப்பார்வையிட வருகை தந்தனர். அவர்களுள் செல்வி. எச்.இ.காய்திரி இஸ்சார் குமார், இந்தியத் தூதுவர், புரூசெல்ஸ், குறிப்பிடத்தக்கவராவார். இவர் மிகவும் ஆர்வத்துடன் சக கண்காட்சியாளர்கள் மற்றும் இந்திய ஏற்றுமதியாளர்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றினார். மேலும் இவர் இந்திய ஏற்றுமதியாளர்களிடம் கலந்துரையாடி ஆன்டிபயாடிக்ஸ் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

எம்.பி.இ.டி.எ.வின் அதிகாரிகள் பார்வையாளர்களைச் சந்தித்து, அவர்களின் தேவையைக் கேட்டறிந்து அவர்களை, அவர்களின் தேவையை நிறைவேற்றும் திறனுடைய இந்திய ஏற்றுமதியாளர்களிடம் அனுப்பி வைத்தனர். மேலும் இந்திய ஏற்றுமதியாளர்களுடன் வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள இறக்குமதியாளர்கள் அவர்களுடன் தொடர்பிலுள்ள இந்திய ஏற்றுமதியாளர்களின் காட்சிக் கூடத்திற்கு நேரடியாகச் சென்று தங்களது எதிர்கால வர்த்தக மேம்பாட்டிற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இந்தியன் பெவிலியனில் காட்சிக்கு வைக்கப்பட்ட கடலுணவுப் பொருட்களில் மிகப் பெரிய அளவிலான டைகர் இறால் பார்வையாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் கருத்தைக் கவர்வதாக இருந்தது.

இந்தியக் காட்சிக் கூடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உலர்ந்த மற்றும் உறைநிலையில் வைக்கப்பட்டிருந்த மீன் வகைகளை முறைப்படி பேக்கிங் செய்யப்பட்டிருந்த விதம் பார்வையாளர்களைக் கவர்ந்தது. மேலும் இந்த தருணங்களில் கிடைத்த வர்த்தக வாங்குவோரில் பலர் L.vannamei, பிளாக் டைகர், உடனே உண்பதற்கேற்ற முறையில் பதப்படுத்தப்பட்ட தயாரிப்புகள், இறால் மற்றும் ஃபிஷ் ஃபில்லட்ஸ் அகியவைக் குறித்து விசாரித்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக இந்தியத் தூதுவரகத்தின் அதி காரிகள் எம்.பி.இ.டி.எ. மற்றும் இந்திய ஏற்றுமதியாளர்களின் காட்சிக் கூடத்தை நேரில் பார்வையிட்டனர். அதுசமயம் இந்த கண்காட்சியின் நடவடிக்கைகளைக் கேட்டறிந்தனர். வெளிநாட்டு வர்த்தகர்களின் எதிர்பார்ப்பு அவர்களின் கருத்து என்னவாக இருந்தது என்பதை தூதரக அதிகாரிகள் பதிவு செய்தனர். மூன்றாம் நாள் இந்த சீஃபுட் எக்ஸ்போ குளோபல் நிறைவடைந்தது. இந்த கண்காட்சியின் மூலமாக இந்திய கடல் உணவுப் பொருட்களுக்கு உலக அரங்கில் குறிப்பாக ஐரோப்பிய யூனியன் பகுதியில் நல்ல வரவேற்பு இருந்ததைக் கண்டறிய முடிந்தது.

**ஷிரிம்ப் டயலாக் 2**

புரூசெல்ஸ் எக்ஸ்போவின் போது Seafood Importers and Processors Allinaace (SIPA) ஒரு சிறிய நிகழ்ச்சியாக ஷிரிம்ப்



பெல்ஜியத்திலுள்ள இந்தியத் தூதுவர் திருமதி.காய்திரி இஸ்சார் குமார் அவர்களுக்கு கடலுணவுப் பொருட்களை அறிமுகம் செய்து வைப்பவர் திரு.டோலா சங்கர் ஐ.ஓ.எஃப்.எஸ், இயக்குநர் (மார்க்கெட்டிங்) எம்.பி.இ.டி.எ.



திரு.சந்தோஷ் குமார் சாரங்கி, இ.ஆ.ப. இணைச் செயலர், மத்திய வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், திரு.சர்வேஷ் ராய், ஆலோசகர், இந்தியத் தூதரகம், புரூசெல்ஸ், திரு.டி.டோலா சங்கர், இயக்குநர், (மார்க்கெட்டிங்) எம்.பி.இ.டி.எ. ஆகியோர் திரு.வில் லியம் வேண்டெர் பிஜி, சீஃபுட் டிரேட் இன்ட்லெஜின்ஸ் போர்டல் அவர்களுடன் கலந்துரையாடும் காட்சி


டயலாக் 2 என்பதை ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கு முன்பு ஷிரிம்ப் டயலாக் 1 கோவாவில் ஐ.ஐ.எஸ்.எஸ்.சில் முக்கியமான பங்கேற்பாளர்களான சீஃபுட் எக்ஸ்போர்ட் அசோசியேசன் ஆஃப் இந்தியா, ஐரோப்பிய கமிஷன் மற்றும் ஐரோப்பா / இந்தி யாவிலிருந்துள்ள வர்த்தகப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு ஏப்ரல்25ல் புரூசெல்ஸ் எக்ஸ்போவின் சினிடாக் ரூமில் நடைபெற்றது. திரு.டி.டோலா சங்கர், ஐ.ஓ.எஃப்.எஸ். இயக்குநர் (மார்க்கெட்டிங்) எம்.பி.இ.டி.எ.வின் செயல்பாடுகளை எடுத்துக் கூறினார். மேலும் ஐரோப்பிய யூனியனுக்கு அனுப்பப்படும் இறாலில் ஆன்டிபயாடிக் கலப்பைக் கட்டுப்படுத்துவதற்கு செய்துவரும் தரக்கட்டுப்பாட்டு சோதனை முறைகள் பற்றி எடுத்துக் கூறினார். ஐரோப்பிய யூனியனின் ஆரோக்கியம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அதிகாரியான செல்வி. முனைவர் சில்வி குளான் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் பேசும்போது கீழ்க்கண்ட பிரச்சனைகளை விளக்கி இவற்றைப் பின்பற்றுவது அவசியம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் ஏற்றுமதி ஏஜென்சியின் காம்பிடெண்ட் அதாரிட்டி ஐரோப்பிய யூனியனுக்கு மீன் தொடர்பான பொருட்களை அனுப்பும் நீர் உயிரின வளர்ப்புப் பண்ணைகள் அனைத்தும் அங்கீகாரம் பெற்றவை என்றும் ஐரோப்பிய யூனியனின் தரக் கோட்பாடுகளைப் பின்பற்றியே பொருட்களை உற்பத்தி செய்கின்றன மற்றும் இவை தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொருட்களை உற்பத்தி செய்யும் துவக்க நிலையிலேயே பிரச்சனைகள் உருவாகாமல் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சோதனை செய்யும் நிறுவனங்களுடன் சிறந்த புரிதலுடன் கூடிய அணுகுமுறையை துவக்க நிலை உற்பத்தியாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த கூட்டத்தின் போது இயக்குநர் (மார்க்கெட்டிங்) ஆன்டிபயாடிக்ஸ் பிரச்சனை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட





இந்தியப் பெவிலியனில் அதிகாரிகள் பார்வையாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களைச் சந்தித்துப் பேசும் காட்சி



எம்.பி.இ.டி.எ. அதிகாரிகள் இ.ஐ.சி.யின் துணை இயக்குநர் திரு.ஆர்.எம்.மாண்ட்லிக் அவர்களுடன்...





எம்.பி.இ.டி.எ.வின் கண்காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட கடலுணவுப் பொருட்கள்




*கண்காட்சியில் கலந்து கொண்ட வேறு நாடுகளின் கடலுணவுப் பொருட்களின் தோற்றம்*

நிறுவனங்களை மீண்டும் உட்படுத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். அதற்கு பதிலாக இந்த பிரச்சினை தொடர்பான முடிவை இப்போது கூற இயலாது என்றும் இது தொடர்பான ஆய்வு இந்தியாவில் நடைபெற்றுவருவதாகக் கூறப்பட்டது.

இந்த கூட்டத்தில் போது மேலும் பிரச்சனைகளாக கூறப்பட்டவை.

ஆரம்பநிலை உற்பத்தியில் தர ஆய்வு செய்யப்படாத பொருட்களை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

இந்த பிரச்சனையில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்பவர்களை மட்டும் உட்படுத்தாமல், இதே நீர்நிலைகளைப் பயன்படுத்தும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

மீன்கள் கரை சேர்ந்ததும் மேற்கொள்ளப்படும் அதிகாரிகளின் சோதனை மட்டும் இல்லாமல் துறை சார்ந்த அல்லது ஏஜென்சிகளின் தொடர் கண்காணிப்பில் நடைபெற வேண்டும்.

### டிஜி சான்டேயுடன் சந்திப்பு

திரு.சந்தோஷ் குமார் சாரங்கி, இ.ஆ.ப. இணைச் செயலர், மத்திய வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், திரு.சர்வேஷ் ராய், ஆலோசகர், இந்தியத் தூதரகம், புரூசெல்ஸ், திரு.டி.டோலா சங்கர், இயக்குநர், (மார்க்கெட்டிங்) எம்.பி.இ.டி.எ. மற்றும் ஆர்.எம். மாண்ட்லிங், துணை இயக்குநர், இ.ஐ.சி. ஆகியோர் அடங்கிய குழு



*திரு.நரேஷ் விஷ்ணு தம்படா, உதவி இயக்குநர், பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கும் காட்சி*

ஏற்கனவே தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த குழு ஏப்ரல் 25ல் முனைவர். மைக்கேல் ஸ்கேனல், உணவு மற்றும் கால்நடை அலுவலகம்,அவர்களைச் சந்தித்தது.

இந்த சந்திப்பின்போது எம்.பி.இ.டி.எ. கீழ்க்கண்ட பிரச்சனைகளை முன்வைத்தது.

நிறுத்தி வைக்கப்பட்ட இந்திய ஏற்றுமதி நிறுவனங்களை மீண்டும் உட்படுத்த வேண்டும். பார்டர் இன்ஸ்பெக்சனுக்கான சாம்பிளை இப்போதுள்ள 50 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்க வேண்டும்.

எம்.பி.இ.டி.எ. இதுவரை 61,000 நீர் உயிரின வளர்ப்பு நிறுவனங்களை பதிவு செய்துள்ளது. அறுவடை செய்வதற்கு முன்பே சோதனை செய்வது, கட்டாயமான ஆன்டிபயாடிக் சோதனை, போன்றவற்றை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி யாகும் இறால் வகைகளுக்கு நிரந்தரமாக செய்து வருகிறது.

எம்.பி.இ.டி.எ. நாடு முழுவதும் எலிசா ஆய்வகங்களை நிறுவி ஆன்டிபயாடிக்ஸ் இல்லாத இறால் வளர்ப்பை பி.எச்.டி. எனும் பிரி ஹார்வெஸ்ட் டெஸ்ட்கள் மூலமாக சான்று வழங்கி வருகிறது.


துவக்கநிலை உற்பத்தியை சோதனை செய்வதற்காக NRCP எனும் National Residue Control Plan நீர்நிலை உற்பத்திப் பொருட்களை எம்.பி.இ.டி.எ.வின் நான்கு ஆய்வகங்களில் ஐரோப்பிய யூனியனின் கோட்பாடுகளைப் பின்பற்றி சோதனை மேற்கொள்ளப்படுகிறது. எம்.பி.இ.டி.எ. இதுவரை சுமார் 5,000 மாதிரிகளை ஆய்வகச் சோதனை செய்துள்ளது.

எம்.பி.இ.டி.எ.வின் சீரிய முயற்சியால் இந்தியாவில் நீர் உயிரினங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலமான ஆந்திரப் பிரதேசம் ஒரு அரசாணை பிறப்பித்துள்ளது. இதன்படி மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுக்கள் மீன் உற்பத்தியில் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களைப் பயன்படுத்துவதை சோதனை செய்வதற்கும், இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தியும், மாதிரிகளைச் சேகரித்து ஆய்வகச் சோதனைக்கு அனுப்புவது, இதில் முறைகேடு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது போன்ற திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது.

இந்திய அரசின் வர்த்தகச் செயலர் இந்தியாவில் கடல் சார்ந்த பகுதிகளில் மீன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மாநிலங்களின்தலைமைச்செயலர்களுக்குஆந்திரப்பிரதேசத்தைப் பின்பற்றியுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எழுத்து பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சியில் இந்தியப் பெவிலியனின் திறன் பாராட்டும் விதத்தில் அமைந்திருந்தது. உலகத்திலேயே மிகப்பெரிய அளவிலான கண்காட்சி என்பது முற்றிலும் உண்மையே. இந்த கண்காட்சியில் கிடைக்கப் பெற்ற வர்த்தக விசாரணைகள் இந்த இதழில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த கண்காட்சியில் கலந்து கொண்ட ஏற்றுமதி யாளர்களும் திருப்தியான மனநிலையில் உள்ளனர். ஏற்றுமதி யாளர்களுக்கென தனிப்பட்ட மேஜை வர்த்தக உடன்பாடுகளை மேற்கொள்வதற்காக எம்.பி.இ.டி.எ. கொடுத்தது அனைவராலும் வரவேற்கப்பட்டது. இது வரும் கண்காட்சிகளிலும் தொடர வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர்.



# முதியவர்களுக்கான நல்ல எதிர்காலமுள்ள உணவுச் சந்தை

ஜுன் நகயாமா
எக்சிகியூடிவ் அசிஸ்டண்ட், எம்.பி.இ.டி.எ. டிரேட் புரமோசன் அலுவலகம், டோக்கியோ

ஆசிய நாடுகளான ஜப்பான், சீனா மற்றும் கொரியா போன்ற நாடுகளில் வயதான முதியவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் பெருகி வருகிறது. எதிர்காலத்தில் இந்தியாவும் கூட இதுபோல முதியவர்களின் நலன் மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் ஊட்டம் தரும் பொருட்களைத் தருவதில் கவனம் செலுத்த வேண்டிவரும். இது தொடர்பாக முதியவர்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு கருதி அவர்களுக்கான மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வது முக்கியமான செயல்பாடாக இருக்கும்.

இவர்களுக்கான உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதற்காக விரிவான அளவிலான வழிமுறைகளான மைக்ரோ ஓவனில் பாதியளவிற்கு வேக வைக்கப்பட்ட உணவு, வீட்டில் லஞ்ச் பாக்ஸ், மெதுவான கடிகள், எலும்பற்ற மீன் துண்டுகள், நர்சிங் ஹோமில்/ மருத்துவமனையில் உணவு, போன்றவை சமீபத்தில் துவங்கப்பட்டுள்ளன. இதில் புதிய பொருட்களும், நவீன தொழில்நுட்ப வசதிகளும் அமைக்கப்படும்.

இந்த தருணத்தில் உறைநிலைப் பொருட்கள் போன்றவற்றை அறிமுகம் செய்துள்ள உணவு தொழில் நுட்பத்துறைக்கு நன்றி கூற வேண்டும். புதிய வடிவில் வர்த்தகத்திற்கு வந்துள்ள பொருட்கள் முதியவர்களுக்கு ஏற்றதாக உள்ளது. இதனை நேரடியாகவே அவர்களால் உட்கொள்ள முடியும். முதிவர்களுக்கான கடல் உணவில் மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்கள் சுகாதாரமான முறையிலும் உற்பத்தியின் துவக்க நிலையைக் கண்டறியும் விதத்திலும் அவை தயாரிக்கப்பட வேண்டும்.

**அறிமுகம்**

தற்போதைய நிலையில் உலகம் முழுவதுமாக முதியோர்களின் (அறுபது வயதிற்கும் மேலானவர்கள்) எண்ணிக்கை 143 மில்லியனாகும். ஆசியாவில் பல நாடுகளிலும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. ஜப்பானில் முதியோர் விகிதம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. (65 வயதிற்கும் மேலானவர்கள்) இந்த கணக்கில் பார்க்கும் போது 2015ல் பத்துப் பேரில் நான்கு பேர் 65 வயதிற்கும் மேலானார்களாக இருப்பார்கள். கொரியாவிலும் 2045ல் மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதம் முதியவர்களாக இருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளில் சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், மலேசியா, கம்போடியா ஆகிய நாடுகளிலும் இதே நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவில் 2035ல் முதியோர் எண்ணிக்கை 35.8 மில்லியனாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்தியாவில் முதியவர்களின் அளவு 2050ல் மொத்த மக்கள் தொகையில் 20 சதமாக இருக்கும். எனவே முதியவர்களுக்கென்று உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவது அவசியமாகும். கடலுணவுப் பொருட்கள் உட்பட முதியவர்களை மனதில் கொண்டுள்ள உணவுப் பொருட்களின் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

**முதியோர்களிடம் மீன் உட்கொள்ளும் முறையில் மாற்றம்**

முதியவர்களால் உணவு பயன்பாடு சந்தையில் எவ்வாறு மாற்றத்தைக் கொண்டுவர இயலும்? உதாரணத்திற்கு ஜப்பானை எடுத்துக் கொள்வோம். முதியவர்களின் உணவு உட்கொள்ளும் பழக்கத்தில் மீன்களின் அளவு குறுகிய காலத்தில் அதிகமாக உயர்ந்துள்ளது. முதியவர்களின் மீன் உட்கொள்ளும் அளவு 2012 முதல் 2015 வரை 16 சதவீதம் அதிகமானது. ஆனால் தற்போதைய கணக்குப்படி 44 சதவீதமாக மேலும் உயர்ந்துள்ளது. (ஆதாரம்-2)



அதே சமயத்தில் வாழ்வியல் முறையிலும் உடல் திறனிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதுமை காரண மான தளர்ச்சியால் விதவிதமான உணவுகளை உட்கொள்வதில் ஆர்வமின்றி மெதுவாக கடித்து உண்பது, எளிதில் சமைக்கக் கூடியதுமான உணவு வகைகளில் விருப்பம் கொண்டுள்ளனர். ஜப்பான் மற்றும் கொரியா போன்ற நாடுகளில் முதியவர்கள் தனிமை யிலும் அல்லது சிறிய குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அதாவது, வயதான தம்பதியர் அல்லது தகப்பன்/பிள்ளை அல் லது தாய்/பிள்ளை என்ற முறையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு ஒவ்வொரு முறையும் அதிக அளவிலான உணவை தயாரிப்பது என்பது அவசியமற்றது. எளிதில் சமைக்கக் கூடியது அல்லது உடனே பயன்படுத்தக் கூடியது போன்ற உணவுகளே அவர்களின் தேவையாகிறது.

முதியவர்களுக்கு ஏற்படும் உடல் தளர்வு காரணமாக அவர்களால் வெளியே நடமாட இயலாத போது வீடிற்குள்ளேயே இருக்க வேண்டி வரும். சிலசமயங்களில் உடல் நலக் குறைவு ஏற்படும்போது மருத்துவமனை அல்லது ஸ்பெசல் நர்சிங் ஹோம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படும் போது அவர்களுக்கு உதவிய செய்ய குடும்பத்தார்க்கும் இயலாத நிலை ஏற்படும்.

எனவே இவற்றையெல்லாம மனதில் கொண்டு உணவு செய்து கொண்டு தரும் சேவை என்பது லஞ்ச் பாக்ஸ், மைக்ரோ ஓவனைப் பயன்படுத்தி பாதி வேக வைத்த உணவு போன்றவற்றை தயாராக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை இருமடங்காகும் நாள் விரைவில் வரவிருக்கிறது. முதியவர்களுக்கென்று மருத்துவ மனைகள் மற்றும் நர்சிங் ஹோம்களில் உணவு தயார் செய்வதும் அதிகரிக்கும். இந்தகைய உணவுகள் பெரியவர்களுக்கு ஏற்ற வகையில் தயாராக்கப்படும். இதனை சிறியவர்களும் பள்ளிக்கு கொண்டு செல்ல விரும்புவர்.

**மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்கள்**

இத்தகைய பின்னணியில் சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் உடனே உண்பதற்கேற்ற உணவுப் பொருட்களின் வருகை அதிகமாகும். சூப்பர் மார்க்கெட் தொடர்களின் 60 சதவீதம் மீன் உணவுப் பொருட்கள் முதியவர்களுக்கான விற்பனையாக உள்ளது. மீன் வகைகளில் குளிரூட்டப்பட்ட மீன், இறால் போன்றவற்றை உறைநிலைப் படுத்தியது. போன்றவையாகும்.

ஜப்பானின் பிரிபேர்டு ஃபுட் அசோசியேசனின் கூற்றுப்படி, 2016ல் தயார் செய்யப்பட்ட உணவின் மதிப்பு 9.84 டிரிலியன் யென் ஆகும். இது 2015ஐ விட 2.7 சதவீதம் அதிகமாகும். கன்வீனியன்ஸ் ஸ்டோர்களில் கணிசமான அளவில் விற்பனையாவது தயார் செய்யப்பட்ட உணவுப் பொருட்களாகும்.

கன்வீனியன்ஸ் ஸ்டோர்களில் முதியவர்கள் வாங்கிய உணவுப் பொருட்களை உட்கார்ந்து சாப்பிடுவதற்கான இடங்களும் ஒதுக்கப்படுகிறது. வீடுகளிலும் கூட பெண்கள் உடனடியாகப் பயன்படுத்தும் வகையிலான பொருட்களின் மீது நாட்டம் கொண்டு வருகின்றனர். அவற்றை மைக்ரோ ஓவனில் வைத்து வேகவைத்து சமையலை எளிதாக்கிக் கொள்கின்றனர். இளைய தலைமுறையினருக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நேரத்தை சமையலுக்கென்று ஒதுக்க முடியாத வாழக்கை முறையில் எளிமை யான சமையல் அதிகம் விரும்பப்படுகிறது.

முதியவர்களுக்கு உணவுப் பொருட்களைக் கடிப்பது, மெல் வது போன்ற பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கு நவீனமான உணவுப் பொருட்கள் உதவியாக உள்ளது. ஆய்வுக்குறிப்புகளின்படி 2016ல் இது போன்ற பொருட்களின் விற்பனை 22.75 பில்லியன் யென்னாக இருந்தது. இது சென்ற ஆண்டைவிட 12.3 சதவீதம் அதிகமாகும். மே 2017ன் கணக்குகளின்படி 1853 வர்த்தக ரீதி

யிலான நர்சிங் ஃபுட் தயாரிப்புகள் வழக்கத்தில் உள்ளன. அதே சமயம் ஜப்பானின் மக்கள் தொகை குறைந்து கொண்டே வருவதால் ஜப்பானிய நிறுவனங்கள் தங்களது முதியவர்களுக்கான பொருட்களை 2030 அல்லது 2040ல் வெளிநாட்டு சந்தைகளில் விற்பதற்கு முயற்சிக்கும் என்று கருதப்படுகிறது.

ஒரு பெரிய நிறுவனம் ரிடார்ட் போச் ஃபுட்டை வெற்றிகரமாக தயாரித்தது. நீரிழிவு நோயாளிகளை மனதில் கொண்டு கலோரி வகைகள் குறைவாக பயன்படுத்தப்பட்ட உணவு முதியவர்களுக்கு ஏற்றதாக இருந்தது. மேலும் அதனை ஆரோக்கியத்தை நிலைப்படுத்த வேண்டும் என்று விரும்பும் இளைய தலைமுறையினரும் இந்த தயாரிப்பை விரும்பி ஏற்றனர்.

நோய்களின் தன்மைக் கேற்ற தயாரிப்புகளும் உருவாக்கப்படுகிறது. நீரிழிவு, கிட்னி நோய், அல்சர், இரத்த சோகை, கணைய நோய் மற்றும் பலநோய்களுக்கேற்ற உணவுகளும் தயார் செய்யப்படுகிறது.

மறதி நோய் உள்ளவர்களுக்கு தேங்காய் எண்ணெய் சேர்த்த உணவு நோயின் தன்மையைக் குறைக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஜப்பானில் 2020ல் சுமார் ஏழு மில்லியன் மக்கள் மூளை குழம்பிய நிலையில் இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. இது மறதி நோயைவிட கொடுமையானது. இவற்றிற்கு முன்னெச்சரிக்கையாக தேங்காய் எண்ணெய் சேர்த்த உணவை உட்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

எனவே முதியவர்களைப் பாதுகாக்கும் விதத்திலான உணவுப் பொருட்களின் தயாரிப்பு அதிகமாகும். இதற்கு சிறப்பான எதிர்காலம் இருக்கிறது. முதியவர்கள் எளிதில் சுவைத்து உட்கொள்ளும் விதத்திலான உணவுப் பொருட்களை அதிகம் விரும்புகின்றனர். மேலும் அவர்களுக்கு சுவை நரம்புகளைத் தூண்டிவிடும் வகையிலான கறிச் சுவை உணவுகளுக்கும் நல்ல வரவேற்பு இருக்கும். மேலும் இவ்வாறு தயாரிக்கப்படும் உணவு வகைகள் மிகவும் தரத்துடன் இருப்பதால் முதியவர்களுக்கு உண்ணும் உணவால் உருவாகும் பிரச்சனைகள் வராது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முதியவர்களுக்கான உணவு தயாரிப்பு என்பது அறிவியலின் பின்பலத்தில் நடப்பதாகும். எனவே இதற்கு மிகவும் சிறப்பான எதிர்காலம் உண்டு என்பது உறுதி.




THE MARINE PRODUCTS EXPORT DEVELOPMENT AUTHORITY (Ministry of Commerce & Industry, Government of India)
Head Office, MPEDA House, Building No: 27/1162, PB No:4272, Panampilly Avenue, Panampilly Nagar PO, KOCHI-682 036,

# ஏப்ரல் 2018ல் இந்தியாவில் குறிப்பிட்ட துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்

ஜிஜ்னேஷ் விசாவாதியா, வி.வி.அஃப்சல், என்.ஜே.நீத்து, & ஜோய்சி வி தாமஸ்
நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ


## அறிமுகம்

இந்திய மீன்வளத்தை நிலைநிறுத்துவது என்பது, அதனைக் கண்காணித்து எந்த அளவிற்கு மீன்பிடித்தல் நடைபெற்றுள்ளது என்பதைத் தொடர்ந்து பதிவு செய்வதில் அடங்கியுள்ளது. உலக அளவில் Catch Certification Scheme என்பது அறிமுக மாகியுள்ளது. இதன் நோக்கம், தகவல் தெரிவிக்கப்படாத, சட்டவிரோதமான மற்றும் ஒழுங்கற்ற மீன்பிடித்தலை தடைசெய்வது என்பதாகும். இவற்றைக் கண்காணித்து இந்தியாவிலிருந்து கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கான கேட்ச் ஃபிஷ் சான்றிதழ் வழங்குவதற்கான பொறுப்பை எம்.பி.எ.டி.எ. ஏற்றுள்ளது. இதில் நெட்ஃபிஷ், ஒன்பது கடல் சார்ந்த மாநிலங்களிலுள்ள 47 முன்னணித் துறைமுகங்களில் கடல் மீன் பிடிப்பதிலுள்ள அனைத்து விவரங்களையும் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. (அட்டவணை 1)


இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்கள் என்பது மீன் வரத்தின் ரகவாரியாகவும், மாநிலவாரியாகவும், பகுதி மற்றும் துறைமுகங்கள் வாரியாகவும் கணிணியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் ஏப்ரல் 2018ல் முக்கியமான துறைமுகங்களில் கரையேறிய மீன் வரத்துத் தொடர்பான புள்ளிவிவரங்களாகும்.

அட்டவணை 1: புள்ளிவிவரத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்கள்

| Sl. No. | State | Fishing harbour |
|---|---|---|
| 1 | Kerala | Beypore |
| 2 | | Puthiyappa |
| 3 | | Thoppumpady |
| 4 | | Munambam |
| 5 | | Sakthikulangara |
| 6 | | Thottapally |
| 7 | | Kayamkulam |
| 8 | | Vizhinjam |
| 9 | Karnataka | Mangalore |
| 10 | | Malpe |
| 11 | | Gangoli |
| 12 | | Tadri |
| 13 | | Karwar |
| 14 | | Honnavar |
| 15 | Maharashtra | Harne |
| 16 | | New Ferry Wharf |
| 17 | Maharashtra | Ratnagiri (Mirkarwada) |
| 18 | | Sasson Dock |
| 19 | Gujarat | Veraval |
| 20 | | Porbandar |
| 21 | | Mangrol |
| 22 | West Bengal | Digha (Sankarpur) |
| 23 | | Deshapran |
| 24 | | Namkhana |
| 25 | | Sultanpur |
| 26 | | Kakdwip |
| 27 | | Raidigi |
| 28 | Odisha | Paradeep |
| 29 | | Balaramgadi |
| 30 | | Bahabalapur |
| 31 | | Dhamara |
| 32 | Andhra Pradesh | Kakinada |
| 33 | | Machilipatnam |
| 34 | | Nizampatnam |
| 35 | | Visakhapatnam |




*வரைபடம் 1: ஏப்ரல் 2018ல் இனவாரியான மீன் வரத்து*




*வரைபடம் 2: ஏப்ரல் 2018ல் கிடைத்த முக்கியமான மீன்கள்*

| | | |
|---|---|---|
| 36 | Tamil Nadu | Chennai |
| 37 | | Pazhaiyar |
| 38 | | Nagapattinam |
| 39 | | Tuticorin |
| 40 | | Cuddalore |
| 41 | | Mandapam |
| 42 | | Colachel |
| 43 | | Pondicherry |
| 44 | | Karaikal |
| 45 | | Chinnamuttom |
| 46 | Goa | Cutbona |
| 47 | | Malim |

### கிடைத்த மீன்களின் அடிப்படையில் மதிப்பீடு

ஏப்ரல் 2018ல் தேர்வு செய்யப்பட்ட 47 துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்களில் சுமார் 44,819.80 டன் மீன் கிடைத்ததாகப் பதிவாகியுள்ளது. இதில் மொத்த அளவில் 38 சதவீதமான 17,180.29 டன் ஆழ்கடல் மீன்பிடித்தலின் மூலமாகக் கிடைத்ததாகும். இதனைத் தொடர்வது கடலடிவாழ் மற்றும் ஷெல் பிஷ் வகை மீன்கள் மூலமாக, முறையே 15,036.93 டன் (34 சதவீதம்) மற்றும் 12,602.58 டன்(28 சதவீதமாகும். (வரை படம்.1)

சுமார் 111 வகையான மீன்கள் இந்த மாதம் கிடைத்துள்ள நிலையில் முதல் ஐந்து இடத்தில் இருப்பவை, சங்கரா, ஊசிக்கணவாய், அயிலை, வாளை, மற்றும் கத்தாளை, என்பனவாகும்.(வரை படம்-2) இந்த ஐந்தும் சேர்ந்து மொத்த அளவில் 45 சதவீதமாகும். (வரை படம்:2) மேற்குறிப்பிட்ட ஐந்து வகை மீன்களைத் தவிர, கணவாய், வெளிச்சி, சூரை மீன்,

ஆகிய மீன்களின் வரத்து ஒவ்வொன்றும் மொத்தத்தில் 1,500 டன்களுக்கும் அதிகமாகவே இருந்தது. இம்மாதம் மிகக் குறைந்த அளவில் கிடைத்தது வாவல் திருக்கை ஆகும்.(0.10 டன்)

### ஏப்ரல் 2018ல் கிடைத்த முக்கிய வகைகள்

ஏபரல் 2018ல் இனம் மற்றும் அளவுப்படி வரிசைப்படுத்திய விவரத்தை அட்டவணை 2ல் காணலாம்.. அயிலை, வாளை மற்றும் சூரை மீன்கள் அதிகமான அளவிலும், கடலடி மீன் வகையில், சங்கரா, கத்தாளை, மற்றும் தும்பிளி மீன்கள் முன்னணியில் இருந்தன. ஷெல்ஃபிஷ் வகையில் கிடைத்தவையில் மொலுஸ்கேன் இனத்தைச் சேர்ந்த கணவாய், ஊசிக்கணவாய், ஆக்டோபஸ், மற்றும் வெல்க் ஆகியவை 59 சதவீதமும், மீதமுள்ள 41 சதவீதம் கிரஸ்டாசியன் வகையில் பினாயிட் இறால் அதிக அளவில் இருந்தது.

அட்டவணை 2: ஏப்ரல் 2018ல் இனவாரியான மீன்களின் பட்டியல்

| Fishery item | Quantity in tons | % of total catch |
|---|---|---|
| **Pelagic finfish** | | |
| Indian mackerel | 3907.77 | 8.72 |
| Ribbon fish | 3758.05 | 8.38 |
| Tuna | 2182.09 | 4.87 |
| Anchovy | 937.93 | 2.09 |
| Indian oil sardine | 1129.40 | 2.52 |
| Scad | 1379.44 | 3.08 |
| Barracuda | 665.32 | 1.48 |
| Horse mackerel | 1038.12 | 2.32 |
| Seer fish | 499.99 | 1.12 |
| Leather jacket | 270.79 | 0.60 |
| Trevally | 377.77 | 0.84 |
| Lesser sardines | 306.73 | 0.68 |
| Dolphin fish | 156.75 | 0.35 |
| Bombay duck | 161.78 | 0.36 |
| Mullet | 117.69 | 0.26 |
| Cobia | 37.93 | 0.08 |
| Marlin | 37.00 | 0.08 |
| Oriental bonito | 36.40 | 0.08 |
| Sail fish | 30.00 | 0.07 |
| Needle fish | 29.67 | 0.07 |
| Herring | 26.30 | 0.06 |
| Queen fish | 19.89 | 0.04 |
| Hilsa | 16.61 | 0.04 |
| Indian thread fish | 15.96 | 0.04 |
| Seabass | 14.37 | 0.03 |
| Flat needle fish | 7.04 | 0.02 |
| Indian ilisha | 6.70 | 0.01 |
| Indian salmon | 5.98 | 0.01 |
| Rainbow runner | 3.96 | 0.01 |
| Silver sillago | 2.90 | 0.01 |
| **Total** | **17180.29** | **38.33** |
| **Demersal finfish** | | |
| Japanese Thread fin bream | 5043.50 | 11.25 |
| Croaker | 2281.03 | 5.09 |
| Lizard fish | 1696.09 | 3.78 |
| Sole fish | 1056.03 | 2.36 |
| Bull's eye | 1077.82 | 2.40 |
| Moon fish | 1170.33 | 2.61 |
| Cat fish | 1107.22 | 2.47 |
| Snapper | 459.19 | 1.02 |
| Reef cod | 424.99 | 0.95 |
| Pomfret | 215.89 | 0.48 |
| Pony fish | 194.04 | 0.43 |
| Eel | 85.33 | 0.19 |
| Ray | 78.92 | 0.18 |
| Goat fish | 71.58 | 0.16 |
| Indian halibut | 39.81 | 0.09 |
| Emperor bream | 9.83 | 0.02 |
| Black tip shark | 8.91 | 0.02 |
| Batfish | 6.13 | 0.01 |
| Parrot fish | 3.80 | 0.01 |
| Whip fin silver biddy | 2.20 | 0.00 |
| Yellow fin sea bream | 1.73 | 0.00 |
| Filefish | 1.60 | 0.00 |

| | | |
|---|---|---|
| Spine foot | 0.80 | 0.00 |
| Tiger perch | 0.18 | 0.00 |
| **Total** | **15036.93** | **33.55** |
| **Shellfish** | | |
| ***Crustaceans*** | | |
| Penaeid shrimp | 4248.51 | 9.48 |
| Sea crab | 521.00 | 1.16 |
| Non-penaeid shrimp | 373.60 | 0.83 |
| Lobster | 34.40 | 0.08 |
| Mud crab | 2.47 | 0.01 |
| **Total crustaceans** | **5179.98** | **11.56** |
| ***Mollusc*** | | |
| Squid | 4630.42 | 10.33 |
| Cuttle fish | 1759.03 | 3.92 |
| Octopus | 656.45 | 1.46 |
| Whelk | 365.00 | 0.81 |
| Clam | 11.70 | 0.03 |
| **Total mollusc** | **7422.60** | **16.56** |
| **Total shellfish** | **12602.58** | **28.12** |
| **Grand Total** | **44819.79** | **100.00** |


## மாநிலவாரியான அளவு

மூன்று மீன்பிடிப்பகுதிகளில் தென்மேற்குக் கடற்கைரையில் கேரளா, கர்நாடகம் மற்றும் கோவா கடற்கரைப் பகுதிகளுக்குட்பட்ட 16 துறைமுகங்களில், இந்த மாதம் அதிகமான அளவில் சுமார் 20,946.81 டன் (47 சதவீதம்) கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்வது வடமேற்குக் கடற்கரைப் பகுதி யில் (மகாராஷ்டிரா, மற்றும் குஜராத்) தேர்வு செய்யப்பட்ட ஏழு துறைமுகங்களிலிருந்து 20,187.31 டன் கிடைத்துளது. (45 சதவீதம்) வடமேற்குக் கடற்கரைப் பகுதியில் மொத்தத்தில் 38 சதவீத அளவிலான மீன் கிடைத்துள்ளது. (வரை படம் 3) இவ்வாறு மேற்குக் கடற்கரைப் பகுதியில் மொத்தத்தில் 92 சதவீதம் மீன்கள் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் அடங்கிய தென்கிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள 14 துறைமுகங்களில் கிடைத்த கடல் மீன்களின் வரத்து 2,568.41 டன்களாகும். (மொத்த அளவில் ஆறு சதவீதம்) அதே சமயம் வடகிழக்குப் பகுதியில் ஒடிசா, மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்வு செய்யப்பட்ட 10 இடங்களில் குறைத்த அளவிலான 1,117.26 டன்கள் (இரண்டு சதவீதம்) அளவிலான மீன்கள் பதிவாகியுள்ளது.

தென்மேற்கு மற்றும் வட கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் வடமேற்குப் பகுதியை விட ஆழ்கடல் மீன்கள் அதிக அளவில் கிடைத்தது. (வரை படம் 4) அதே சமயம், வடமேற்குப் பகுதியில் கடலடிவாழ் மீன்கள் அதிகமாகவும், ஷெல்ஃபிஷ் வரத்து மற்ற இரண்டு ரகங்களைவிட அதிகமாக இருந்தது. (படம் 4).




வரைபடம் 3. ஏப்ரல் 2018ல் மாநிலம்வாரியாக கிடைத்த மீன்களின் அளவு





வரைபடம் 4 ஒவ்வொரு மாநிலத்திலும் இனவாரியாகக் கிடைத்த மீன்களின் ஒப்பீடு (டன்களில்)

### மாநிலவாரியான வரத்து

குஜராத் மாநிலத்தில் ஏப்ரல் 2018ல் அதிகப்படியான அளவான 12,278.87 டன் மீன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 27 சதமாகும். (படம் 5) குஜராத்திற்கு அடுத்ததாக கர்நாடகாவில் 9,129.25 டன் வந்துள்ளது. மொத்த அளவில் 20 சதவீதமாகும்.

கேரளம் 8,022.97 டன்களுடன் (18 சதவீதம்) மூன்றாவது இடத்திலுள்ளது. மேற்குக் கடற்கரை மாநிலங்களிலிருந்து மொத்த அளவில் 92 சதவீதம் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தமிழ்நாட்டில் அதிக அளவான 1,619.14 டன் (சுமார் மூன்று சதவீதம்) பதிவாகியுள்ளது. இந்த மாதத்தில் மேற்கு வங்க மாநிலத்தில் குறைந்த அளவாக 365.55 டன் மீன் வரத்து பதிவாகியுள்ளது.




வரைபடம் 5: ஏப்ரல் 2018ல் மாநிலவாரியாகக் கிடைத்த அளவுகள் (டன்களில்)

அட்டவணை3: ஏப்ரல் 2018ல் பல்வேறு மாநிலங்களில் கிடைத்த முக்கியமான இனங்கள்

| Item | Quantity in tons | % of total landings of the region |
|---|---|---|
| **South West** | | |
| Indian mackerel | 3196.39 | 15.26 |
| Japanese Thread fin bream | 2298.58 | 10.97 |
| Squid | 1600.76 | 7.64 |
| Lizard fish | 1178.14 | 5.62 |
| Moon fish | 1143.87 | 5.46 |
| **North West** | | |
| Squid | 2823.99 | 13.99 |
| Ribbon Fish | 2686.41 | 13.31 |
| Japanese Thread fin bream | 2685.77 | 13.30 |
| Croaker | 1468.99 | 7.28 |
| Indian mackerel | 1050.11 | 5.20 |
| **South East** | | |
| Tuna | 464.25 | 18.08 |
| Cuttlefish | 263.67 | 10.27 |
| White Prawn | 160.11 | 6.23 |

| | | |
|---|---|---|
| Brown Shrimp | 154.68 | 6.02 |
| Squid | 153.84 | 5.99 |
| **North East** | | |
| Croaker | 257.23 | 23.02 |
| ***Karikkadi Shrimp*** | 195.29 | 17.48 |
| Sea Crab | 59.80 | 5.35 |
| Tuna | 58.37 | 5.22 |
| Ribbon Fish | 52.35 | 4.69 |

அட்டவணை 4: ஏப்ரல் 2018ல் பல்வேறு மாநிலங்களில் கிடைத்த முக்கியமான இனங்கள்

| Item | Quantity in tons | % of total landings of the state |
|---|---|---|
| **Kerala** | | |
| Indian Oil Sardine | 668.13 | 8.33 |
| Squid | 594.30 | 7.41 |
| Deep sea Shrimp | 572.83 | 7.14 |
| Indian mackerel | 566.90 | 7.07 |
| Cuttle Fish | 543.52 | 6.77 |
| **Karnataka** | | |
| Japanese Thread fin bream | 1665.56 | 18.24 |
| Indian mackerel | 1002.66 | 10.98 |
| Lizard fish | 889.52 | 9.74 |
| Squid | 750.66 | 8.22 |
| Ribbon Fish | 749.93 | 8.21 |
| **Goa** | | |
| Indian mackerel | 1212.90 | 31.96 |
| Moon fish | 843.00 | 22.22 |
| Japanese Thread fin bream | 274.57 | 7.24 |
| Squid | 255.80 | 6.74 |
| Tuna | 206.40 | 5.44 |
| **Maharashtra** | | |
| Japanese Thread fin bream | 1485.77 | 18.79 |
| Ribbon Fish | 723.41 | 9.15 |
| Croaker | 703.99 | 8.90 |
| Brown Shrimp | 623.29 | 7.88 |
| Horse mackerel | 571.71 | 7.23 |
| **Gujarat** | | |
| Squid | 2290.50 | 18.65 |
| Ribbon Fish | 1963.00 | 15.99 |
| Japanese Thread fin bream | 1200.00 | 9.77 |
| Cat fish | 845.50 | 6.89 |
| Croaker | 765.00 | 6.23 |
| **Tamil Nadu** | | |
| Tuna | 292.99 | 18.10 |
| Cuttle Fish | 251.93 | 15.56 |
| Squid | 135.74 | 8.38 |
| Indian Oil Sardine | 114.91 | 7.10 |
| Anchovy | 53.52 | 3.31 |
| **Andhra Pradesh** | | |
| Tuna | 171.26 | 18.04 |
| Brown Shrimp | 133.42 | 14.05 |
| White Prawn | 119.71 | 12.61 |
| Pink Shrimp | 83.25 | 8.77 |
| Tiger Prawn | 62.23 | 6.56 |
| **Odisha** | | |
| Croaker | 189.40 | 25.20 |
| *Karikadi* Shrimp | 156.59 | 20.83 |
| Tuna | 58.37 | 7.76 |
| Sea Crab | 52.80 | 7.02 |
| Squid | 40.00 | 5.32 |

| West Bengal | | |
|---|---|---|
| Croaker | 67.83 | 18.56 |
| *Karikkadi* Shrimp | 38.70 | 10.59 |
| Bombay Duck | 24.04 | 6.58 |
| Brown Shrimp | 21.09 | 5.77 |
| Ribbon Fish | 18.19 | 4.98 |

துறைமுகவாரியான மீன் வரத்து

இம்மாதத்தில் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்த துறைமுகங்கள் வாரியாகக் கிடைத்த மீன்களின் அளவு பற்றிய வரைபடம் 6, 7, ஆகும். மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் போர்பந்தர் துறைமுகத்தில் அதிக அளவான 5,585.97 டன் (12 சதவீதம்) கிடைத்துள்ளது. இதனைத் தொடர்வது மால்பே துறைமுகமாகும். இங்கு 4,808.41 டன் (11 சதவீதம்) கிடைத்துள்ளது.

மங்களூர் துறைமுகத்தில் 3,842.84 டன்னும் (9 சதம்) இதனைத் தொடர்ந்து வேராவல் துறைமுகத்தில் 3,775.90 டன்னும் (8 சதம்) பதிவாகி உள்ளது. கிழக்குக் கடற்கரை துறைமுகத்தில் விசாகப்பட்டினத்தில் அதிகமான வரத்தாக 6,64.74 டன் (ஒரு சதவீதம்) பதிவாகியுள்ளது. மிகவும் குறைவான அளவான 0.94 டன் பதிவாகியுள்ள இடம் கார்வார் துறைமுகமாகும்.

படகுகளின் வரவின் அடிப்படையிலான மதிப்பீடு

ஏப்ரல் 2018ல் வந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை 21,677 ஆகும். இதில் அதிக அளவிலான படகுகளின் வரத்து (3,406) இருந்தது விராவல் துறைமுகத்திலாகும். இதனைத் தொடர்ந்து போர்பந்தர் துறைமுகத்தில் 2,5615 படகுகள் வந்துள்ளன. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் ஐந்து இடங்களில் ஆயிரத்திற்கும் அதிகமான படகுகள் வந்துள்ளன. இதன் விவரம் அட்டவணை 5ல் உள்ளது. சுமார் 72 சதவீத மீன்பிடிக் கப்பல் வகையைச் சேர்ந்தவை. மீதமுள்ளவை பர்ஸ் சீனிங், ரிங் சீனிங், கில்னெட்டர்ஸ், லாங் லைனர்ஸ் மற்றும் பாரம்பரிய கட்டுமர வகையைச் சேர்ந்தவைகளாகும்.

அட்டவணை 5: ஏப்ரல் 2018ல் 1000 படகுகளுக்கும் அதிகமாக வந்த துறைமுகங்கள்


| Sl. No. | Fishing harbours | State | Number of boat arrivals |
|---|---|---|---|
| 1 | Veraval | Gujarat | 3406 |
| 2 | Porbandar | Gujarat | 2515 |
| 3 | Mangrol | Karnataka | 1993 |
| 4 | Mangalore | Karnataka | 1747 |
| 5 | Harne | Maharashtra | 1085 |

ஒப்பீட்டு பகுத்தாய்வு

அட்டவணை 6ல் ஏப்ரல் மாதத்தை, முந்தைய மாதங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். ஏப்ரல் மாதத்தில் மார்ச் மாதத்தைவிட 17,000 டன் அதிகமாகக் கிடைத்துள்ளது. ஆழ்கடல் மீன் பிடித்தல் முன்னிலையில் இருந்தாலும், சதவீத அளவில் ஒரு சதவீதம் சென்ற மாதத்தைவிட குறைவாகவுள்ளது. கடலடிவாழ் மீன்களின் வரத்து இரண்டு சதவீதம் அதிகரித்து இருந்தாலும், செல்பிஷ் வரத்து ஒரு சதவீதம் குறைந்துள்ளது. இந்த மாதப் பங்களிப்பில் சங்கராவின் பங்கு மொத்த அளவில் 11 சதவீத மாகும். ஊசிக்கணவாயின் வரத்து இரண்டாம் நிலையில் உள்ளது. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் அதிகமான மீன் வரத்தில் குஜராத்திலுள்ள போர்பந்தர் முதலிடத்தில் உள்ளது. மார்ச் மாதத்தைவிட ஏப்ரல் 2018ல் 6,000 படகுகள் குறைவாக வந்துள்ளது.

அட்டவணை 6: ஒப்பீட்டு பகுத்தாய்வு

| | February 2018 | March 2018 | April 2018 |
|---|---|---|---|
| **Total Catch** | **61,463.55 t** | **62,203.72 t** | **44,819.80 t** |
| Landing of Pelagic finfishes | 27,282.94 t (44%) | 24,254.18 t (39%) | 17,180.29 t (38%) |
| Landing of Demersal finfishes | 18,369.24 t (30%) | 20,134.22 t (32%) | 15,036.93 t (34%) |
| Landing of Shellfishes | 15,811.37 t (26%) | 17,815.32 t (29%) | 12,602.58 t (28%) |
| Species recorded highest landing | Squid (10%) | Squid (9%) | Japanese Thread fin bream (11%) |
| State recorded highest landing | Gujarat (32%) | Gujarat (28%) | Gujarat (27%) |
| Harbour recorded highest landing | Veraval (14%) | Beypore (18%) | Porbandar (12%) |
| **Total Boat Arrivals** | **26,964** | **27,512** | **21,677** |





*வரைபடம் 6: ஏப்ரல் 2018ல் மேற்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*




*வரைபடம் 7: ஏப்ரல் 2018ல் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

## சுருக்கம்

ஏப்ரல் 2018ல் 47 முக்கியமான துறைமுகங்களில் சுமார் 44,819.80 டன் மீன் பிடித்தல்நடந்துள்ளது. இதில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, ஷெல்ஃபிஷ் மற்றும் கடலடிவாழ் மீன்பிடிப்பைவிட அதிக அளவில் இருந்துள்ளது. மொத்த அளவில் சங்கராவின் வரத்து அதிகமாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரையிலுள்ள மாநிலங்கள் மொத்தத்தில் 92 சதவீதமும், தென்மேற்குக் கடற்கரைப் பகுதிகள் 47 சதவீதமும் பங்களித்துள்ளன ஒன்பது கடல் சார்ந்த மாநிலங்களுள் குஜராத்தில் அதிகமான மீன் பிடிப்பு நடைபெற்றுள்ளது தேர்வு செய்யப்பட்ட 47 துறைமுகங்களில் 14 இடங்களில் 1000 டன்களுக்கும் அதிகமான மீன் பிடித்தல் இருந்துள்ளது. இதில் போர்பந்தர் பேபூர் துறைமுகத்தில் அதிகமான மீன் வரத்தும், விராவல் துறைமுகத்தில் மீன் மற்றும் படகுகளின் வரத்தும் அதிகமாக இருந்தது. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்டதால் இப்பகுதிகளிலிருந்து மீனின் வரத்து குறைவாக இருந்துள்ளது.



# மாத்ருபூமி கார்ஷிக மேளா 2018ல் எம்.பி.இ.டி.எ.




பொதுமக்களுக்கு அகுவா போனிக்ஸ் முறை விளக்கப்படுகிறது



*பார்வையாளர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப் படுகிறது*




*மாத்ருபூமி கார்ஷிக மேளா 2018ல் அமைக்கப்பட்டிருந்த எம்.பி.இ.டி.எ/நெட்ஃபிஷின் காட்சிக் கூடத்தின் தோற்றம்*

எம்.பி.இ.டி.எ.வின் கொச்சியிலுள்ள மண்டலப் பிரிவு அலுவலகம், நெட்ஃபிஷ்சுடன் இணைந்து கேரளாவில் பெரும்பாவூரில் ஏப்ரல், 4 முதல் 10 வரை நடைபெற்ற மாத்ருபூமி கார்ஷிக மேளா 2018ல் கலந்து கொண்டது. திரு.எல்டோஸ் குன்னப்பில்லி, எம்.எல்.எ. பெரும்பாவூர் இந்த வேளாண் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். எம்.பி.இ.டி.எ./ நெட்ஃபிஷ் காட்சிக் கூடத்தில் அகுவாபோனிக்ஸ் முறையின் செயல்விளக்கம் செய்துகாண்பிக்கப்பட்டது. இது பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது. பொதுமக்கள் இந்த அகுவாபோனிக்ஸ் முறையை விரும்பி, அதன் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொண்டதோடு இதனை தங்களது வீடுகளில் அமைக்க என்ன செலவாகும் என்பது போன்ற விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

மேலும் நெட்ஃபிஷ் தயாரித்து காட்சிப் படுத்திய போஸ்டர்களில் நெட்ஃபிஷின் செயல்பாடுகளைக் குறித்த விவரங்கள் இருந்தன. மீன் பிடிப்படகுகளுக்கு தடைக் காலம், கேரளத்தின் மீன் உற்பத்தி, கடற்கரைப் பகுதி மாசடையும் விதம் போன்றவை பார்வையாளர்கள் தெரிந்து கொள்ளும் விதத்தில் இருந்தன.

# தேசிய செயல் திட்டம் தொடர்பான கருத்தரங்கம்



கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரதிநிதிகள்

சட்டவிரோதமான, தகவல் இல்லாத, மற்றும் முறையற்ற மீன் பிடித்தலைத் தடைசெய்யவும், தடுக்கவும், ரத்து செய்யவுமான தேசிய செயல் திட்டத்தை தயார் செய்வதற்கான கருத்தரங்கம் ஏப்ரல் 23-24 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இந்த கருத்தரங்கை Bay of Bengal Programme Inter -Governmental Organisation (BOBP-IGO) ஏற்பாடு செய்திருந்தது. மேலும் இந்த கருத்தரங்கு இந்திய அரசின் வேளாண் & விவசாயிகள் நலத்துறை அமைச்ச கத்தின் கால்நடை பால் & மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் உணவு மற்றும் வேளாண் நிறுவனத் தின் உறுப்பினர்களான நாடுகள் 2001ல் சர்வதேச அளவிலான சட்ட விரோதமான, பதிவு செய்யப்படாத மற்றும் முறையற்ற மீன்பிடித்தலைத் தடை செய்ய, தடுக்க மற்றும் ரத்து செய்வதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக சம்மதம் தெரிவித்து இருந்தன. இதில் வரையறுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாக இருக்கும். இதனால் 2001 முதல் இந்த திட்டம் காரண மாக விரும்பத்தக்க விதத்திலான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. ஐரோப்பிய யூனியன் இதற்கான திட்டத்தை Council Regulation (EC) No:1005/2008 of 29 September 2008 என்பதன் மூலம் உருவாக்கியது. சமுதாய அடிப்படையிலான செயல்பாடு மூலமாக தடை செய்ய, தடுக்க, மற்றும் ரத்து செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இதனுடன் சர்வதேச அளவிலான வர்த்தக ஒப்பந்தங்களின் போது ஐ.யு.யு. எனப்படும் மூன்றும் முக்கிய அம்சங்களாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் இதனை Indian Ocean Tuna Commission எனும் Regional Fisheries Management Organisation என்பது சூரை மீன் மற்றும் இது சார்ந்த இனங்களை நிர்வாகம் செய்யும் அமைப்பு இந்த ஐ.யு.யு. எனும் மூன்றையும் அமுல்படுத்தும் முயற்சியில் உள்ளது. மேலும் இந்த ஐ.யு.யு. பிரச்சனை என்பது முக்கியமானதாக உலக வர்த்தக நிறுவனங்களின் ஒப்பந்தங்களின் போது கருதப்படுகிறது. இதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது.


முனைவர்.டி.ஆர்.கோபகுமார் மற்றும் முனைவர் சைன் குமார் சி.எஸ். துணை இயக்குநர்கள், எம்.பி.இ.டி.எ. ஆகியோர் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர். எம்.பி.இ.டி.எ. அதிகாரிகள் மட்டுமின்றி வேளாண் & விவசாயிகள் நலன் அமைச்சகத்தின் கால்நடை, பால் மற்றும் மீன்வளத் துறை, வனம் மற்றும் காலநிலை மாற்றம், மெரைன் மெர்கன்டைல் துறை, இந்தியன் கோஸ்ட் கார்ட், கோஸ்டல் மெரைன் போலீஸ், கடற்கரை சார்ந்த 13 மாநிலங்களின் மீன் வளத்துறை, மற்றும் யூனியன் டெரிடரிஸ், ஆர்.&.டி நிறுவனங்கள், (எஃப்.எஸ்.ஐ, சி.எம்.எஃப்.ஆர்.ஐ, சி.ஐ.எஃப்.டி. சி.ஐ.எஃப்.என்.டி என்.ஐ.டி.ஐ. ஆயோக், அரசு சாரா நிறுவனங்கள், ஐ.ஐ.எஃப்.டி. மற்றும் பேஆஃப் பெங்கால் புரோகிராம் இன்டர் கவர்ன்மெண்டல் ஆர்கனைசேன்





மூன்று குழுக்களின் விவாதம் நடைபெறும் காட்சி

## Work-Plan (Proposed)




ஆகிய நிறுவனங்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டன. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கருத்துக்களை வெளிப்படுத்துதல், விவாதித்தல், கலந்துரையாடல் போன்றவை நடைபெற்றன.

இந்தியாவில் கடல் மீன்பிடித்தல் தொடர்பானவற்றில் ஐ.யு.யு. பின்பற்றப்படும் விதம், சர்வதேச மற்றும் மண்டல அளவில் நிகழும் சம்பவங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. பிரதிநிதிகளை மூன்று குழுக்களாகப் பிரித்து மூன்று விதமான தலைப்புகளில் விவாதிக் கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகள் செய்ய வேண்டியவை, சட்டம் மற்றும் கொள்கை ரீதியான முறைகள், மனிதத் திறனை அதி கப்படுத்துதல் போன்றவை குறித்தான விவாதங்கள் நடைபெற்றன.

விவாதத்திற்குப் பிறகு மூன்று குழுக்களும் தங்களது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி எடுக்கப்படும் முடிவுகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களது கருத்துக்கள் வரவேற்கப்படும் என்று பி.ஓ.பி.பி.கூறியது.

# குவித்தலுக்கு எதிர்ப்பு: வர்த்தகத்தைக் காப்பாற்றும் கருவியா?

அஞ்சு
அசிஸ்டண்ட் டைரக்டர், எம்.பி.இ.டி.எ., தூத்துக்குடி.




Dumping அதாவது குவித்தல் என்றால் என்ன? உலக வர்த்தக நிறுவனத்தின் விளக்கத்தின்படி, இது சர்வதேச அளவில் விலையில் ஏற்படும் வேறுபாட்டாகும். இதன் பொருள், ஒரு பொருளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடு உள்நாட்டில் நிலவும் விலையைவிட குறைவான விலைக்கு இறக்குமதி செய்யும் நாடுகளில் விற்பனை செய்வதாகும். இனியும் சுருக்கமாகச் சொல்வதென்றால் டம்பிங் என்பது இரண்டு சந்தைகளில் நிலவும் விலையை ஒப்பிட்டுப் பார்ப்பதாகும். ஏற்றுமதியாகும் நாடுகளில் உள்ள விலயை normal price என்றும் இறக்குமதியாகும் நாடுகளில் இருக்கும் விலையை export price என்றும் கூறுவர்.

### அமெரிக்காவில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் இறால்களுக்கு குவித்தலுக்கு எதிரான சுங்கவரி

அமெரிக்கா Southern Shrimp Producers Alliance கொடுத்த தகவலின் அடிப்படையில் வேறு எந்த நாடுகளிலும் இல்லாத அளவில் விலையைக் குறைத்து இறாலை அமெரிக்காவில் குவிப்பது தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்த ஆய்வுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் 2004 முதல் இந்தியாவிலிருந்து இறக்குமதி மூலமாக அமெரிக்காவில் குவிக்கப்படும் இறால்களுக்கு 10.17 சதவீதம் ஆன்டி – டம்பிங் எனும் சுங்கவரியை விதித்தது. இது ஒவ்வொரு முறையும் மறு ஆய்வு செய்யப்படும். ஒவ்வொரு வருடமும் செய்யப்படும் இந்த மறு ஆய்வு 11முறை நடைபெற்றுள்ளது. இந்த பதினொன்றாவது ஆய்வில் வரி 0.84 சதவீதம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 12வது ஆய்வின் ஆரம்பகட்டத் தகவல்களின் அடிப்படையில் இந்த வரி 2.34 சதவீதமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனினும் இறுதி அறிவிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இது கடல் உணவுப் பொருட்களை ஏற்றுமதியாளர்களுக்கு பிரச்சினையாகும்.

### வெவ்வேறு நாடுகளில் குவித்தலுக்கு எதிரான வரியை நிர்ணயிக்கும் முறை

#### 1. கொரியா

கொரியாவில் பொருட்களைக் குவித்தலுக்கான வரியை நிர்ணயம் செய்வது என்பது இந்த ஆய்வு நடக்கும் காலகட்டத்தில் குறிப்பிட்ட எடையுள்ள பொருட்களின் சராசரியான normal value மற்றும் import price ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டைப் பொருத்தே தீர்மானிக்கப்படுகிறது. நார்மல் வேல்யூ என்பது கீழ்க்கண்ட நான்கு முறைகளில் கணக்கிடப்படுகிறது.

1. நார்மல் வேல்யூ என்பது ஏற்றுமதி செய்யும் நாட்டின் உள்ளூரின் சந்தை விலை.

எனினும், ஏற்றுமதி செய்த நாட்டின் உள்ளூர் விற்பனையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக உற்பத்தி செலவைவிட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தால் கொரியன் இறக்குமதி மதிப்பிலிருந்து ஐந்து சதவீதம் குறைத்து மதிப்பிடப்படும். மேலும் இந்த கமிஷன் கீழ்க்கண்ட இரண்டு முறைகளாலும் நார்மல் வேல்யூ கணக்கிடப்படுகிறது.

2. நார்மல் வேல்யூவைக் கணக்கிடுவது ஏற்றுமதி செய்யும் நாடுகள் மூன்றாவது நாடுகளுக்கு நிர்ணயிக்கும் விலையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

3. திட்டமான நார்மல் வேல்யூ என்பது ஏற்றுமதி செய்யும் நாடுகளின் உற்பத்திச் செலவு மற்றும் நிர்வாகச் செலவுகளை உள்ளடக்கியதாகும்.

## 2. இந்தியா

இந்தியாவில் இரண்டு விதமான வழிமுறைகளின்படி குவித்தலுக்கான வரி தீர்மானிக்கப்படுகிறது. அவை நார்மல் வேல்யூ மற்றும் எக்ஸ்போர்ட் வேல்யூவாகும் இவை இரண்டுமே இதே அளவிலான வர்த்தகத்தில் பேக்டரி அளவு விலையுடன் ஒப்பிடப்பட்டு குவித்தலின் அளவு தீர்மானிக்கப்படுகிறது.

உள்நாட்டு விற்பனையின் மூலமாக நார்மல் வேல்யூவைத் தீர்மானிக்க இயலாத நேரத்தில் கீழக்கண்ட முறைகளின் அடிப்படையில் நார்மல் வேல்யூ நிர்ணயிக்கப்படுகிறது.

1. ஒப்பிடத்தக்க அளவிலான பிரதிநிதித்துவம் கொண்ட மூன்றாவது நாட்டின் ஏற்றுமதி விலையுடன் ஒப்பிடுதல்.

2. உற்பத்தியான நாட்டின் உற்பத்திச் செலவுடன் நியாயமான நிர்வாகம், விற்பனை, பொதுவான செலவுகள் மற்றும் நியாயமான லாபம் ஆகியவற்றை உட்படுத்துதல்.

## 3. ஐரோப்பிய யூனியன்

ஐரோப்பிய யூனியனின் விதிகளின்படி மார்கெட் பொருளாதாரமுள்ள நாடுகளில் நார்மல் வேல்யூவை கீழ்க்கண்ட ஒன்று அல்லது அதற்குமேலுள்ள முறைகளைப் பின்பற்றி கணக்கிடப்படுகிறது.

1. ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளரின் நாட்டில் நிலவும் உள்ளூர் விலையின் அடிப்படையில்.

2. அதே நாட்டிலுள்ள இதர ஏற்றுமதி விற்பனையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களின் அடிப்படையில்.

3. மூன்றாவது நாட்டின் ஏற்றுமதி விலை.

4. உற்பத்திச் செலவுடன் இதர நிர்வாகச் செலவு, மற்றும் நியாயமான லாபம்.

## 4. அமெரிக்கா

ஜீரோயிங் மெதடாலஜி மூலமாக அமெரிக்காவில் குவித்தலுக்கு எதிரான வரி கணக்கிடப்படுகிறது. உலக வர்த்தக நிறுவனத்தின் கருத்துப்படி இதனால் ஏற்றுமதியாளர்கள் அதிகப்படியான வரியைச் செலுத்த வேண்டிவரும் என்பதாகும்.

ஜீரோயிங் முறை என்பது ஏற்றுமதி மார்க்கெட்டிலுள்ள விலையையும் அமெரிக்க மார்க்கெட்டிலுள்ள விலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதாகும். ஏற்றுமதி சந்தையில் உள்ள விலை அமெரிக்காவின் விலையைவிட குறைவாக இருந்தால், அப்போது விலையை ஜீரோவில் வைத்து நிர்ணயம் செய்யப்படும். அமெரிக்க நிர்வாகத்தினர் விலை வேறுபாட்டிலுள்ள அனைத்து எதிர்மறை விலை வித்தியாசங்களை தவிர்த்து விட்டு மொத்த ஏற்றுமதி மற்றும் விற்பனை மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. அமெரிக்காவில் குவித்தலுக்கு எதிரான பிரச்சனைகளில் ஜீரோயிங் முறை நல்ல தாக்கத்தைத் தந்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் 2004 மற்றும் 2007ல் குவித்தலுக்கான செயல்பாடுகளில் அமெரிக்கா பின்பற்றும் குவித்தலுக்கான வரியை நிர்ணயம் செய்யும் ஜீரோயிங் முறையை எதிர்த்து உலக வர்த்தக



நிறுவனத்திடம் முறையிட்டது. இதனை பல நாடுகள் வரவேற்றன. அவற்றுள் முக்கியமான நாடுகள் பிரேசில், சீனா, ஜப்பான், கொரியா, மெக்சிகோ, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகும். இதன் விளைவாக பிப்ரவரி 14, 2012ல் டி.ஓ.சி. தனது முடிவை அறிவித்தது. இதன்படி யு.ஆர்.எ.எ. பிரிவு 123ன்படி ஜீரோயிங் முறையில் கொள்கை ரீதியான மாற்றங்கள் செய்யப்படும் என்பதாகும்.

## விலையில் வேறுபாடு

விலையில் வேறுபாடு இருக்கும் பட்சத்தில் அமெரிக்கா மூன்று ஒப்பீடு முறைகளைப் பின்பற்றும்.

1. சராசரி எடையாக்கப்பட்ட பொருட்களின் நார்மல் வேல்யூவுடன் எடையாக்கப்பட்ட ஏற்றுமதி விலை அல்லது வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி விலை. (சராசரிக்கு சராசரி)

2. ஒவ்வொரு தனிப்பட்ட தொழில் நடைமுறையிலும் சராசரி ஏற்றுமதி விலை, அல்லது ஒவ்வொரு வர்த்தக பரிவர்த்தனையிலும் வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி விலை.

3. எடையான சராசரியான நார்மல் வேல்யூவை ஏற்றுமதி விலையுடன் ஒப்பிடுதல் அல்லது தனிப்பட்ட பரிவர்த்தனையில் ஏற்றுமதி விலை.

சராசரி முதல் பரிவர்த்தனை முறையை சில தவிர்க்க முடியாத நிலைகளில் மட்டுமே பயன்படுத்த முடியும். அது ஏற்றுமதி விலை என்பது குறிப்பாக வாங்குவோர்க்குள்ளும், பகுதி அல்லது காலத் திற்கேற்ப மாறுபடும்.

சராசரி முதல் சராசரி வரை எனும் முறையில் மாதாந்திர எடையிடப்பட்ட சராசரியின் நார்மல் வேல்யூவை மாதாந்திர ஏற்றுமதி மதிப்பிலிருந்து கழித்து விடுவதாகும். இவ்வாறு 12 மாத சராசரியைக் கணக்கிட்டு அதில் ஒரு சராசரியை குவித்தலுக்கு எல்லையாக வைத்தல்.

## முடிவுரை

குவித்தலுக்கு எதிரான செயல்பாடுகள் என்பது உள்நாட்டு வியாபாரத்தைக் காப்பாற்ற வந்தவையாகும். இதன் செயல்பாடுகள் தெளிவாகவும் ஒளிவுமறைவற்றதாகவும் இருக்க வேண்டும்.

## References


1. Federal register no. 83- April 30, 2018
2. Differential Pricing Analysis Comments of the International Trade Practices Unit (Ministry of Economy, Government of Mexico)
   Source: https://enforcement.trade.gov/download/dpa/international-trade-practices-unit-cments062414.pdf
3. 2015 Court of International trade review: from targeted dumping to differential pricing by Shana Hofstetter and Bernd Janzen.
4. Differential Pricing – the New Targeting, By Mary Ann McCleary - November 20, 2013 in Antidumping and International Pricing,
   Source: https://captrade.com/2013/11/differential-pricing-the-new-targeting/
5. Some statistical aspects of the Department's use of Cohen's D in measuring differential pricing in Anti-Dumping cases that should be considered before it is formally adopted. Submitted by Professors Joseph L. Gastwirth, Reza Modarres and Qing Pan.
   Source: https://enforcement.trade.gov/download/dpa/3prof-dep-of-statistics-gwu-061914.pdf
6. The antidumping law of Korea
   Source: http://fs2.american.edu/reynolds/www/ADRegulations/Korea.pdf
7. EU Antidumping legal guide, Third edition, September 2015
   Source: file:///C:/Users/USER3/Downloads/0828D%20EU%20anti-dumping%20guide_d6.pdf
8. Federal Register Volume 79, No. 163, August, 2014





# கொடுவா மீன் வளர்த்தல்: விவசாயிகள் கூட்டம்




*திரு. அனில்குமார் பி. இணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. கூட்டத்தில் உரையாற்றுகின்றார்*

விஜயவாடாவிலுள்ள எம்.பி.இ.டி.எ.வின் மண்டலப் பிரிவு அலுவலகம் , கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடையே கொடுவா மீன் வளர்ப்பதில் விழிப்புணர்வு வர வேண்டும் என்ற முயற்சியில் மே 3, 2018ல் விவசாயிகள் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இது நீர் உயிரின வளர்ப்பில் பலவகையான மீன்களை வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தின் பாகமாக நடத்தப்பட்ட கூட்டமாகும்.

கூட்டத்திற்கு வந்திருந்த விவசாயிகளின் பெயர் பதிவு நடந்ததைத் தொடர்ந்து, திரு. அனில்குமார் பி. இணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. தமது வரவேற்புரையின் போது கொடுவா மீன் வளர்ப்பின் அவசியத்தைக் கூறி, மீன் வளர்த்தலில் ஒரு மாறுபட்ட ரகத்தை வளர்ப்பதற்கு ஏற்றது கொடுவா மீன் என்று எடுத்துக் கூறினார். கொடுவா மீனிற்கு சந்தையில் நல்ல விலை கிடைப்பதுடன், கொடுவா மீன் வளர்ப்பதில் நோய் தாக்குதல் போன்ற பிரச்சனைகள் குறைவு என்றும் இறால் வளர்ப்பதை விட கொடுவா வளர்ப்பு எளிதானது என்றும் கூறினார். மேலும் எம்.பி.இ.டி.எ.வின் கீழ் இயங்கிவரும் ஆர்.ஜி.சி.எ. சொசைட்டியைப் பற்றி விளக்கியவர் தமிழ்நாட்டில் சீர்காழியில் கொடுவா மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு மாநிலங்களிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படுவதையும் கூறினார்.

திரு.யாகுப் பாட்டா, ஆந்திரப் பிரதேச மீன் வளர்ப்புத் துறையின் இணை இயக்குநர் தமது வாழ்த்துரையில் கொடுவா மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு மீன் வளர்ப்புத்துறை வழங்கும் நிதி உதவி மற்றுமுள்ள ஆதரவுகள் குறித்து எடுத்துக் கூறினார். இந்த கூட்டத்தை அமைத்துத் தந்த எம்.பி.இ.டி.எ.வின் முயற்சிக்கு நன்றி கூறியவர், விவசாயிகள் இது போன்ற கூட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், எம்.பி.இ.டி.எ. கொடுவா மீன் வளர்ப்பது தொடர்பான செயல்விளக்கக் கூட்டம் ஒன்றையும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வருவதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எம்.பி.இ.டி.எ.வைக் கேட்டுக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு.ஸ்டீவன் டேவிஸ் கொடுவாவை கூண்டுகளில் வளர்க்கும் முறை ஆஸ்திரேலியாவில் இருப்பதாகக் கூறினார். மேலும் அவர் பேசும் போது திறந்த நிலைக் கூண்டுகளில் வளர்க்கப்படும் மீன்களுக்குத் தரப்படும் தீவனம் பற்றியும், சர்வதேச சந்தையில் கொடுவா மீனிற்கு இருக்கும் வரவேற்பையும் விளக்கி விவசாயிகள் தரமான மீன் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

திரு.ஆர்சிமான் லகிரி, துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ தாய்லாந்தில், கூண்டிலும், திறந்தவெளி குளத்திலுமாக மீன் வளர்ப்பதில் தமது அனுபவத்தைக் கூறினார். மேலும் இந்த முறையை அதிகச் செலவில்லாமல் விவசாயிகளால் அமைத்துக் கொள்ள முடியும் என்றார். தாய்லாந்தில் கொடுவா மீன் வளர்ப்பில் ஒரு ஹெக்டேர் பரப்பிலிருந்து 17 டன் மீன் கிடைப்பதாகக் கூறினார்.

திரு.கணேஷ், உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. சேட்டலைட் சென்டர், நெல்லூர், ஆர்.ஜி.சி.எ.வி.-ல் கொடுவா மீன் குஞ்சுகளை

உற்பத்தி செய்துவரும் செயல்பாடுகள் குறித்து கூறினார். மேலும் இந்தியாவில் கொடுவா மீன் உற்பத்தியின் தற்போதைய நிலையைக் எடுத்துக் கூறினார். காரைக்காலில் கொடுவா மீன் வளர்த்தல் தொடர்பான செயல்விளக்கப் பண்ணை இருப்பதான செய்தியை விவசாயிகளுக்குக் கூறினார்.


திரு.சண்முக ராவ், சி.இ.ஓ. அகுவா சொசைட்டிகள் நிலையான மீன்வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று கூறினார். நீர் உயிரின வளர்ப்பில் பி.எம்.பி.களின் அவசியத்தையும் விளக்கினார்.

திரு.ராம்பாபு, மேனேஜர், குரோவெல் ஃபீட் கம்பெனி கொடுவா மீனின் தீவனம் மற்றும் அவற்றை உற்பத்தி செய்யும் முறையைக் கூறி, அவர்களது நிறுவனம் உற்பத்தி செய்த தீவன ரகங்களை விவசாயிகள் காணும் வகையில் ஏற்பாடு செய்திருந்தார்.

கலந்துரையாடல் நிகழ்ச்சியின் போது விவசாயிகளுக்கு கொடுவா மீன் வளர்ப்பில் இருக்கும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் தரப்பட்டது. நிறைவாக திரு.பி.நரசிம்ம ராவ், உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. விஜயவாடா நன்றி கூறினார்.



கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள்



# வட இந்தியாவில் முதல் இறால் தீவன மில் துவக்கம்




*ஹரியானாவில் முதல் இறால் தீவன ஆலை மே15,2018ல் முனைவர்.கே.கே.விஜயன், இயக்குநர், சி.ஐ.பி.எ. மற்றும் முனைவர். பிரவின் புத்ரா, உதவி டைரக்டர் ஜெனரல் , ஐ.சி.எ.ஆர். ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது*

ஐ.சி.எ.ஆர்– சி.ஐ.பி.எ. வனாமி பிளஸ் என்ற பெயரில் வனாமி இறால் வளர்ப்பிற்கான தீவனத்தை உருவாக்கியுள்ளது. இது சிக்கன மானதும் உள்நாட்டுப் பொருட்களைச் சேர்மானங்களாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். மேலும் இந்த தொழில்நுட்பத்தை தனியார் நிறுவனங்களும் அறிந்து கொண்டு இதன் வர்த்தக ரீதி யிலான உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வரிசையில் டாக்டர்.அத்தர் அகுவா ஃபீட் ஹரியானாவில் பிவானி என்ற இடத்தில் புதிய மில் ஒன்றைத் தொடங்கியுள்ளது. வனாமி பிளஸ் இறால் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கு சி.ஐ.பி.எ.வுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை இந்த நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆலை வடக்கு இந்தி யாவில் உருவாகியுள்ள முதல் ஆலையாகும். இதனால் பஞ்சாப், ஹரியானா, மற்றும் ராஜஸ்தான் பகுதிகளைச் சேர்ந்த இறால் வளர்க்கும் விவசாயிகள் பயனடைவர். இந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்த தீவனத்தை தென்னிந்தியாவிலிருந்து வாங்கி வந்தனர்.

இந்த புதிய ஆலையை முனைவர்.கே.கே.விஜயன், இயக்குநர், சி.ஐ.இ.எ. மற்றும் முனைவர்.பிரவின் புத்ரா, உதவி டைரக்டர் ஜெனரல், ஐ.சி.எ.ஆர். மே 15, 2018ல் துவக்கிவைத்தனர். உள்நாட்டு தொழில் நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த மில்லில் ஒரு மணி நேரத்தில் 750 கிலோ உற்பத்தி செய்ய இயலும். அதுபோல் ஒரு நாளில் எட்டு முதல் பத்து டன் வரை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும். இந்த மில் துவக்கி வைக்கப்பட்ட முதல் நாளன்றே தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

ஆலையின் துவக்க விழா நிகழ்ச்சியின் ஒரு பாகமாக ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் பகுதி விவசாயிகள் அடங்கிய கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முனைவர்.கே.கே. விஜயன் பேசும் போது இந்த ஆலையின் செயல்பாடு என்பது ஃபேக்டரி டு ஃபார்ம் என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். அதாவது விவசாயிகள் தங்களுக்குத் தேவையான



*டாக்டர். அகுவா ஃபீட் வட இந்தியாவில் முதல் முறையாக உற்பத்தி செய்த இறால் தீவனம் வெளியிடப்படுகிறது*

இறால் தீவனங்களை நேரடியாக இந்த ஆலையில் இருந்தே வாங்கிச் செல்லலாம். இடைத் தரகர்கள் தேவையில்லை. இதனால் டீலர்களுக்குத் தரப்படும் பங்கு 20 சதவீதம் வரை விவசாயிகளுக்கு லாபமாகும் என்று கூறினார்.

முனைவர்.பிரவின், எ.டி.ஜி. (மீன் வளத்துறை) ஐ.சி.எ.ஆர். இந்த தீவனத்தை உருவாக்குவதில் சி.ஐ.பி.எ.வின் முயற்சியைப் பாராட்டினார். செலவு குறைவாக, உள்ளூர் தொழில் நுட்பத்துடன் இறால் விவசாயிகளின் நலன் கருதி சி.ஐ.பி.எ. இதனை உருவாக்கியுள்ளது மெச்சத்தக்கது என்று கூறினார். இதனால் வட இந்தியாவைச் சேர்ந்த இறால் விவசாயிகளின் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறையும் என்று உறுதிபடக் கூறினார். மேலும் இந்த தீவனம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றார்.

திரு.வினோத் பூனியா, இறால் விவசாயி மற்றும் டாக்டர்.அத்தர் அகுவா ஃபீடின் மேனேஜிங் பார்ட்னர் இறால் விவசாயிகளை வரவேற்று, வட இந்தியாவைச் சேர்ந்த இறால் விவசாயிகளின் நலன் கருதி உருவாக்கப்பட்ட இந்த ஆலை உருவாக்கப்பட்ட பின்னணியை விவரித்தார். இந்த மில்லின் உருவாக்கத்தில் பலவிதமான சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது என்றும் குறிப்பிட்ட காலத்தில், தரமான உற்பத்தியைத் துவக்குவதற்கு பெரிதும் உதவியாக இருந்த சி.ஐ.பி.எ.விற்கு நன்றி கூறினார்.

முனைவர்.கே.அம்பாசங்கர், முதன்மை விஞ்ஞானி, மற்றும் சி.ஐ.பி.எ.வின் ஊட்டச்சத்து மற்றும் தீவன அபிவிருத்தித்துறையின் டீம் லீடர் பேசும் போது இந்த மில்லின் உருவாக்கம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட புரிதல் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தைக் கூறினார். மேலும் இது போன்ற முயற்சிகளால் வேளாண் தொழிலில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட வாய்ப்புகள் உருவாகும் என்றார்.

திரு.ஜோஸ் அந்தோணி, விஞ்ஞானி, சி.ஐ.பி.எ. உள்நாட்டு உப்புநீர் பகுதிகளில் இறால் வளர்ப்பின் நிலைமையை எடுத்துக் கூறினார். மேலும் இறால் வளர்ப்பில் பி.எம்.பி.யை பின்பற்றினால் மட்டுமே நிலையான உற்பத்தியைப் பெற முடியும் என்றார்.

இந்த நிகழ்ச்சியின் போது இறால் விவசாயிகளின் சந்தேகங்களை சி.ஐ.பி.எ. விஞ்ஞானிகள் தீர்த்து வைத்தனர். அதன் பின் விவசாயிகள் ஆலையையும் அங்குள்ள இறால் பண்ணையையும் சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தானைச் சேர்ந்த 150 விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அக்ரி – பிசினஸ் முயற்சியால் இளைஞர்கள் ஈர்க்கப்பட்டு இளைஞர்களை விவசாயத்தில் தக்க வைக்க ஏதுவாக இருக்கும்.

# ஆசியன் கொடுவா மீன் உற்பத்தியில் எம்.பி.இ.டி.எ.



மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைவர், எம்.பி.இ.டி.எ.ஆசியன் கொடுவா மீன் அறுவடை துவக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். (இடமிருந்து இரண்டாவது)

நமது நாட்டில் முதன் முறையாக நீர் உயிரின வளர்ப்புத் துறையில் திறந்த வெளி குளத்தில் ஆசியன் கொடுவா ரக மீனை வளர்க்கும் முயற்சியில் எம்.பி.இ.டி.எ. வெற்றி பெற்றுள்ளது. சந்தையில் மிகுந்த வரவேற்பும் ஏற்றுமதி வாய்ப்பும் அதிகமுள்ள ஆசியன் கொடுவா மீன் உற்பத்தி என்பது சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உகந்ததாக இருக்கும்.

இந்த ஆய்வு முயற்சியில் ஈடுபட்டது எம்.பி.இ.டி.எ.வின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் துணைக்கரமாக இருக்கும் ராஜிவ் காந்தி சென்டர் ஆஃப் அகுவாகல்சர் எனும் பாண்டிச்சேரியின் காரைக்காலில் இயங்கி வரும் நிறுவனமாகும். கொடுவா மீனை கூண்டு வளர்ப்பு முறையில் வளர்த்து உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ ரூ.400/- வரை விற்பதற்கும் ஒரு ஹெக்டேர் பரப்பில் சுமார் ஒன்பது டன் அறுவடை செய்யவும் வழிவகுத்துக் கொடுத்த ஆராய்ச்சி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. 1.5 முதல் 2 கிலோ வரை எடையுள்ள இந்த மீனை முதல் முறையாக அறுவடை செய்து கரைக்குக் கொண்டுவரும் சமயத்தில் உடனிருந்தார். காரைக்காலிலுள்ள செயல் விளக்கப் பண்ணையில் ஒரு அறுவடையில் சுமார் 1.10 டன் மீன் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அவர் பேசும் போது ஏற்றுமதியில் 70 சதவீதத்திற்கு மேல் பங்களிக்கும் இறால் மீனிற்கு மாற்றாக இந்த கொடுவாமீன் விளங்கும் என்று கூறினார்.

பல்வகைத் தன்மையான மீன் வளர்ப்பு முறை ஒன்றே நிலைப்புத் தன்மையைத் தரும் என்றும் நாட்டின் மீன் ஏற்றுமதி அதிகரிப்பதற்கும் உதவியாக இருக்கும் என்றார். ஒரு ஹெக்டேரில் ஒன்பது டன் மீன் அறுவடை என்பது உண்மையிலேயே நம்பிக்கைதரும் ஒன்றாக உள்ளது. இந்த அளவு இனியும் சிறப்பான வளர்ப்பு முறைகளைப் பின்பற்றிச் செய்யும் போது மிகவும் அதிக மாகும் வாய்ப்புகள் உள்ளன. மேலும் இந்த வளர்ப்பு முறைகளை ஆர்.ஜி.சி.எ. விரைவில் விவசாயிகளும் அறிந்து கொண்டு செயல் படும் முயற்சிகளில் ஈடுபடவுள்ளது என்றும் எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் கூறினார்.

ஆர்.ஜி.சி.எ.வின் தலைவராகவும் இருக்கும் மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. கூண்டு முறைக் குளங்களில் வளர்ப்பதற்கு கொடுவா மீன் ஏற்ற ரகமானது. ஆனால் இதில் ஆரம்பகட்ட முதலீடு அதிக மாக இருக்கும். எனவே இதனை சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் ஏற்றெடுத்து செய்வது இயலாத காரியம் என்றார். ஆனால் திறந்த வெளிக் குளங்களில் இதனை வளர்ப்பது எளிது என்பதை காரைக்கால் அறுவடை எடுத்துக் காட்டியுள்ளது என்றும் கூறினார்.

புதுச்சேரியிலுள்ள செயல் விளக்கப்பண்ணை சுமார் 4 ஹெக்டேர் பரப்பில் உள்ளதாகும். இதனைப் புதுச்சேரி அரசு 2000த்தில் ஆர்.ஜி.சி.எ.விற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளது. இதில் மீன் வளர்ப்புச் சாதனை 2002 முதல் துவங்கப்பட்டது. இந்த செயல் விளக்கப்பண்ணையை நம் நாட்டின் பல பாகங்களிலிருந்துள்ள விவசாயிகள், மாணவர்கள்,



ஆசியன் கொடுவா அறுவடை செய்யப்படும் காட்சி

ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, தி பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம் போன்ற வெளிநாட்டு விஞ்ஞானிகள் தொழில் முனைவோர் என பலரும் பார்வையிட வருகின்றனர்.

தற்சமயம் கொடுவா மீன் மற்றும் களி நண்டு வளர்ப்பு முறைகளின் தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்ள இந்த செயல் விளக்கப்பண்னை சிறந்த இடமாகத் திகழ்கிறது. இங்கிருந்து சுமார் 2000 பேர் பயிற்சி பெற்று சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்.ஜி.சி.எ. பலதரப்பட்ட மீன்களின் குஞ்சு உற்பத்தி, நர்சரி பராமரிப்பு, மற்றும் உப்பு நீர் மற்றும் கடல் நீரில் வளர்ப்பு முறைகள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. திலோப்பியா நன்னீரில் வளர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கும் போது களி நண்டு மற்றும் அர்டிமியா போன்றவை பலதரப்பான சூழ்நிலைகளிலும் வளர்க்க முடியும் என்பதால் பெண்களுக்கு குறிப்பாக சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு இவை ஏற்றதாக இருக்கும் என்று மரு.எ.ஜெயத்திலக் கூறினார்.

கடல் உணவு ஏற்றுமதிப் பொருட்களுக்கான இலக்கு 2017-18 காலகட்டத்திற்கு 11.35 லட்சம் மெட்ரிக் டன், ஆறு பில்லியன் டாலர் மதிப்பில் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் அதிகமாக நம்பப்படுவது ஏற்றுமதியில் 70 சதவீதத்தை தனது பங்காகத் தரும் இறாலாகும். அது போல இந்தகைய திறந்த வெளிக் குளங்களின் மூலமாகக் கிடைக்கும் மீன் என்பது இந்தியாவின் பல்வகை மீன்வளர்ப்பு முறையை விருத்தி செய்வதாகவே இருக்கும் என்று மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. கூறினார்.



# நீர் உயிரின வளர்ப்பில் தடை செய்யப்பட்ட ஆன்டி - பயாடிக்ஸ்களை பயன்படுத்தக் கூடாது என்பதற்கான விழிப்புணர்ச்சி முகாம்




*நிகழ்ச்சி நடைபெறும் காட்சி*

ஆந்திராவில் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பாலக்கொள்ளு என்ற இடத்தில் அக்ரிகல்சர் மார்கட் யார்ட் கமிட்டி என்ற இடத்தில் மே 10, 2018ல் நீர் உயிரியன வளர்ப்பில் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களைப் பயன்படுத்துவது தவறு என்பதை எடுத்துக் கூறும் விதத்திலான ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமின் முக்கிய நோக்கம் என்பது மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களைப் பயன்படுத்துவதால் மீன்களின் தரம் குறைந்து போகும், இது கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி வர்த்தகத்தை பாதிக்கும் விதத்திலான சூழ்நிலைகளை உருவாக்கும் என்ற எதார்த்தமான உண்மையை எடுத்துக் கூறுவதற்கே ஆகும். மேலும் இறால் வளர்ப்பில் பி.எம்.பி முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது போன்ற பயனுள்ள செய்திகளை விவசாயிகளுக்கு தரவேண்டும் என்பதற்காக மட்டுமே ஆகும். இந்த நிகழ்ச்சிக்கு 40 முன்னணி விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முனைவர். நிர்மலா ராமநாயுடு, எம்.எல்.எ.. பாலக்கொள்ளு, திரு.அனில் குமார் பி, இணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. மண்டலப் பிரிவு, விஜயவாடா, திரு.ஜி.காந்தி பகவான் ராஜ், எ.எம்.சி. தலைவர், பாலக்கொள்ளு, முனைவர். அஞ்சலி, இணை இயக்குநர், மீன் வளர்ப்புத்துறை, மேற்கு கோதாவரி மாவட்டம், மீன்வளத்துறை, திரு.கோடீஸ்வர ராவ், கூடுதல் இயக்குநர், மீன்வளத்துறை, மற்றும் முதன்மை எஸ்.ஐ.எஃப்.டி. காக்கிநாடா, திரு. கே. சண்முகராவ், சீஃப் எக்சிகியூடிவ் ஆபீசர், காக்கிநாடா, முனைவர்.பானி பிரகாஷ், துணை இயக்குநர், மீன்வளத்துறை, மேற்கு கோதாவரி மாவட்டம், மீன்வளத்துறை, மற்று முனைவர். பி.ஸ்ரீனிவாசலு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. துணை மண்டலப் பிரிவு, பீமாவரம் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

முனைவர். பி. ஸ்ரீனிவாசலு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பீமாவரம் கூட்டத்தினரை வரவேற்றார். அவரது வரவேற்பு உரையில் இந்த நிகழ்ச்சியின் நோக்கம் பற்றி விரிவாகக் கூறினார்.

திரு அனில் குமார் பி, இணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. கடந்த இரண்டு ஆண்டுகளின் ஏற்றுமதி வர்த்தகத்தை 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுள்ள நிலையை எடுத்துக் கூறினார். மே லும் அவர் பேசும் போது விலையில் குறைவு ஏற்பட்டதற்கான காரணங்களை எடுத்துக் கூறி நீர் உயிரின வளர்ப்பிலுள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்த விலைக் குறைவிற்குக் காரணம் குறிப்பாக இறால் வர்த்தகத்தில் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாசிக்ஸ்களைப் பயன்படுத்தியதால் மட்டும் ஏற்பட்டது என்றும் கூறினார். ஐரோப்பிய யூனியன் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் ஆன்டிபயாடிக்ஸ்களின் தாக்கம் இருந்தால் அந்த பொருட்களை ஏற்றுக்கொள்ள இயலாது




*நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்*

என்று திருப்பி அனுப்பும் போது இறாலின் விலையில் குறைவு ஏற்படுகிறது. தென் கிழக்கு ஆசியாவில் இறால் உற்பத்தி அதிக மானதால் ஏற்றுமதி வர்த்தகத்தில் இறாலின் வரத்து அதிகமானது என்று கூறினார். மேலும் அவர் கூறும் போது எம்.பி.இ.டி.எ. ஃபிஷ் எக்ஸ்சேஞ் போர்டலை உருவாக்கியதால் மீன் வர்த்தகத்தில் இடைத் தரகர்களின் நுழைவீடு முற்றிலும் தவிர்க்கப்பட்டது.

முனைவர்.நிம்மாலா ராமாநாயுடு எம்.எல்.எ. பாலகொள்ளு பேசும்போது அரசு மீன் குஞ்சுகள் மற்றும் மீன்களுக்கான தீவனங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் முட்டை மற்றும் கோழிகளின் விலையை வெளியிடுவது போல் இறால் மீனின் தினசரி விலையையும் செய்தித்தாள்களில் வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் பலரும் நஷ்டத்தில் இருக்கின்றனர். ஆனால் மீன் ஏற்றுமதி மற்றும் மீன் தீவனங்களை உற்பத்தி செய்பவர்கள் லாபம் சம்பாதிக்கின்றனர் என்று ஒப்பிட்டுப் பேசினார்.

திரு. கோடீஸ்வர்ராவ், கூடுதல் இயக்குநர், மீன் வளம் மற்றும் முதன்மை எஸ்.ஐ.எஃப்.டி. காக்கிநாடா, கோஸ்டல் அகுவாகல்சர் அதாரிட்டியில் பதிவு செய்யப்படாத இடு பொருட்களைப் பயன்படுத்துவதால் இறால் வளர்ப்பில் ஆன்டிபயாடிக்ஸ்சின் தலையீடு ஏற்படக் காரணமாகிறது என்றார். முறையாகப் பதிவு செய்யப்படாத இடுபொருட்களில் ஆன்டிபயாடிக்சின் தன்மை இருப்பது விவசாயிகளுக்குத் தெரியாது. எனவே அகுவா கடைகளில் அரசு திடீர் சோதனை நடத்தி முறையற்ற பொருட்களின் விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

திரு.காந்தி பகவான் ராஜு, எ.எம்.சி. தலைவர், பாலக்கொள்ளு, பங்குதாரர்களுக்கு இந்த வர்த்தகத்தின் வளர்ச்சியில் பங்கு இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கொள்முதல் விலையை அரசு கண்காணிக்க வேண்டும் என்றார். நீர் உயிரின வளர்ப்பில் அறுவடைக்கு முன்பு முறையான சான்று பெற்றிருப்பது அவசியமாக வேண்டும். ஆன்டிபயாடிக்ஸ்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களை எம்.பி.இ.டி.எ. கண்டறிந்து அவற்றை மூன்று வருடங்களுக்கு தடை செய்ய வேண்டும். போதுமான ஆய்வகங்கள் மற்றும் குளிர்பதன சேமிப்பு நிலையங்களை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு.பி.சூரியநாராயண ராஜு, முன்னணி விவசாயி, மேடபாடு பேசும் போது ஆன்டிபயாடிக்சின் தாக்கத்தோடு மீன் உற்பத்தியில் ஈடுபடுபவர்களை குறிப்பிட்ட காலத்திற்குத் தண்டிப்பது அவசியம் என்றார். மீன் வளர்ப்பில் பயன்படுத்தப்படும் இடு பொருட்களை ஆய்வகத்தில் சோதனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

திரு.பி.வெங்கடசேயா, முன்னணி விவசாயி, பாலகொள்ளு, இறாலில் மதிப்பூட்டம் செய்வதற்கான முயற்சிகளில் எம்.பி.இ.டி.எ. முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்றார். மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பரவலாக எம்.பி.இ.டி.எ.வின் ஆய்வகங்களும் அலுவலகங்களும் தொடங்கப்பட வேண்டும் என்றும் இதற்கு விவசாயிகள் நிதி திரட்டித்தர தயாராக உள்ளனர் என்ற கருத்தையும் வெளியிட்டார்.

முனைவர்.நிம்மாலா ராமாநாயுடு எம்.எல்.எ. பாலகொள்ளு, விவசாயிகளுக்கு பண்ணைகளைப் பதிவு செய்ததற்கான கோல்டு கார்டை விநியோகம் செய்தார். முனைவர். பி.ஸ்ரீனிவாசலு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பீமாவரம் நன்றி கூறினார்.

# குண்டூர் ஸ்பைஸ் பார்க்கில் திலோப்பியா மீன் வளர்ப்பு சோதனை முயற்சி



அறுவடையான திலோப்பியா மீன்கள்

மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைவர் எம்.பி.இ.டி.எ.வின் ஆலோசனையின்படி ஆந்திரப்பிரதேசத்தில் குண்டூரில் செயல் பட்டு வரும் ஸ்பைஸ் பார்க்கில் திலோப்பியா மீன் வளர்க்கும் சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஸ்பைஸ் பார்க்கின் துணை இயக்குனரின் மேற்பார்வையில் ஸ்பைஸ் பார்க் வளாகத்தில் உள்ள குளத்தை ஆர்.ஜி.சி.எ. அதிகாரிகள் அக்டோபர் 17, 2017ல் குளத்தைப் பார்வையிட்டனர். குளத்திலுள்ள நீரின் தன்மை மீன் வளர்ப்பிற்கு ஏற்றது என்பதை அறிந்ததும் இதில் திலோப்பியா மீனை கூண்டு வளர்ப்பு முறையில் செயல்படுத்த தீர் மானிக்கப்பட்டது.

மீன் வளர்ப்பு காலத்தில் எம்.பி.இ.டி.எ. – ஆர்.ஜி.சி.எ. அதிகாரிகள் அவ்வப்போது குளத்தை பார்வையிட்டு மீனின் ஆரோக்கிய நிலை போன்றவற்றை ஆய்வு செய்தவண்ணம் இருந்தனர். இது தொடர்பான குறிப்பு:

| | |
|---|---|
| **Pond Details** | |
| Total area of the pond | 0.8 acre(approx.) |
| No of ponds | 1nos |
| Size of ponds | 70x50mts. |
| **Farm Address** | |
| Spices park, MoCI, Edlapadu village, Guntur district, Andhra Pradesh. | |
| Date of stocking | 14 nov 2017 |
| Date of harvesting | 19 may 2018 |
| Days of culture | 186 days |

| | |
|---|---|
| Size of cage | 3x3x1mts |
| Total no of fingerlings stocked | 120 nos |
| Size at stocking | 3.0 g |
| Total biomass stocked | 360 g |
| Total no of fish harvested (from cage) | 76 nos |
| Survival in cages (excluding escaped fishes from open pond) | 63% |
| Total biomass harvested | 40 kg |
| Abw at harvest | 550 g |
| Max size | 750 g |
| Min size | 500 g |
| Feed used | uno feed |
| Quantity of feed used | 45 kg |
| Feed conversion ratio | 1 : 1.12 |



குண்டூர் ஸ்பைஸ் பார்க்கில் கிடைத்த மீன்கள்

மீன் வளரும் காலத்தில் மீன்களின் தோற்றமும் வளர்ச்சியும் திருப்திகரமாக இருந்தது. ஸ்பைஸ் பார்க்கின் அதிகாரிகள் சிரத்தையுடன் இந்த மீன் வளர்ப்பு சோதனை முயற்சியில் ஈடுபட்டனர். இந்த மீன் வளர்ப்பு சோதனை என்பது வர்த்தக ரீதியில் மேற்கொள்ளப்பட்டதல்ல. குறிப்பிட்ட இந்த பகுதியில் மீன் வளர்ப்பு சாத்தியமாகுமா என்பதனை அறிந்து கொள்ளும் சோதனை முயற்சி மட்டுமே ஆகும். இந்த சோதனை வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்த பகுதியின் பல பாகங்களிலும் வர்த்தக ரீதியிலான மீன் வளர்ப்பு அரசின் ஒப்புதலோடு மேற்கொள்ளப்படும்.

# நெல்லூர் மாவட்ட அகுவா பண்ணைகளுக்கு பதிவு அட்டை விநியோகம்



*திரு.அனில் குமார் பி. இணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. விஜயவாடா அவர்களிடமிருந்து பண்ணை பதிவு அட்டையை பி.எம்.ஆர். இம்பெக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு.எ.முரளிதர் ராவ் பெற்றுக் கொள்கிறார். உடனிருப்பது நிறுவனத்தின் மேலாளர் திரு.யெஸ்பால்*

எம்.பி.இ.டி.எ.வின் சேட்டலைட் சென்டர், நெல்லூர் அலுவலகம் நெல்லூர் மாவட்டத்திலுள்ள நீர் உயிரின வளர்ப்புப் பண்ணைகளுக்கான பதிவு அட்டைகளை ஒரு கிராம அளவிலான கூட்டத்தில் வழங்கிட ஏற்பாடு செய்தது. இந்த பி.எச்.டி. கார்டு கியூ.ஆர். கோடுடன் கூடிய மாஸ்டர் கார்டாகும். இதில் குறிப்பிட்ட பண்ணை உரிமையாளரின் விபரம், பண்ணை அமைவிடம், போன்ற அனைத்து விவரங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

இதற்கு முன்பு எம்.பி.இ.டி.எ. பண்ணைகளை பதிவு செய்ததை உறுதி செய்ய காகித வடிவிலான படிவங்களை வழங்கி வந்தது. இவற்றைக் கையாளுவதில் இருந்த பிரச்சனைகளை நீக்கும் விதத்தில் டிஜிட்டல் பதிவு கார்டுகள் வழங்கப்படுகிறது. இந்த கார்டுகள் வழங்கப்படுவதன் நோக்கம் இறக்குமதி செய்யும் நாடுகள் பொருட்களின் தரக்குறைவு காரணமாக அவற்றை தவிர்த்து விடும் நேரங்களில் குறிப்பிட்ட பொருட்களின் பூர்வீகத்தைக் கண்டறிய இந்த கார்டுகள் பயன்படும்.

திரு.அனில் குமார் பி. இணை இயக்குநர், மண்டலப்பிரிவு அலுவலகம், விஜயவாடா நெல்லூர் மாவட்டத்தின் முதல் பண்ணை பதிவு அட்டையை ஏப்ரல் 18, 2018ல் பி.எம்.ஆர். இம்பெக்ஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து எம்.பி.இ.டி.எ. மூன்று கிராம அளவிலான கூட்டங்களை நடத்தியது. இரண்டு கூட்டங்கள் குடுத்திப்பாலம் கிழக்கு மற்றும் மேற்கிலும் மூன்றாவது கூட்டத்தை கங்காபட்டிணத்திலும் மே 8, 9 2018 தேதிகளில் நடத்தியது. இதில் சுமார் 101 பண்ணை பதிவு அட்டைகள் வழங்கப்பட்டதோடு, மீன் வளர்ப்பில் ஆன்டிபயாடிக்ஸ் இருப்பது தவறு என்பதை விளக்கும் விதத்திலான வகுப்புகளும் விவசாயிகளுக்கு எடுக்கப்பட்டது.

புதிய விவசாயிகளும் தங்களது பண்ணைகளைப் பதிவு செய்ய விருப்பம் தெரிவித்தனர். இதன் மூலம் 12 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. குடுத்திப்பாலம் கிழக்கு மற்றும் மேற்கு கிராமங்களில் 80 விவசாயிகளும், கங்காபட்டிணத்தில் 40 விவசாயிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# மத்திய வர்த்தகத் துறையில் டைரக்டரேட் ஜெனரல் ஆஃப் டிரேட் ரெமடிஸ் துவக்கம்

இந்திய அரசு, The Government of India (Allocation of Business ) Rules 1961ல் ஒரு திருத்தம் கொண்டுவந்துள்ளது. இதன்படி Directorate General of Anti-Dumping and Allied Duties என்பதற்குப் பதிலாக Directorate General of Trade Remedies எனும் துறையை மத்திய வர்த்தகத் துறை உருவாக்கியுள்ளது. இதன் மூலமாக டி.ஜி.டி.ஆர்.எனப்படும் டைரக்டரேட் ஜெனரல் ஆஃப் டிரேட் ரெமடிஸ் என்பது ஒரு ஒருங்கமைப்பு நிறுவனமாக செயல்புரிந்து இந்தியாவின் வர்த்தகப் பாதுகாப்பு அமைப்பாகச் செயலாற்றும்.

இதுவரை Directorate General of Anti-Dumping and Allied Duties என்பது ஆண்டி டம்பிங் மற்றும் சிவிடி தொடர்பான பிரச்சனைகளைக் கவனித்து வந்தது. அதுபோலவே Directorate General of Safeguards (DGS) பாதுகாப்பு தொடர்பான விசயங்களைக் கவனித்து வந்தது. DFGT அளவு தொடர்பானவற்றைக் கண்காணித்து வந்தது. எனவே டி.ஜி.டி.ஆர். கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா 130 ஆண்டி டம்பிங் / வரி செலுத்தாதது மற்றும் முறையற்ற வர்த்தகம் போன்றவற்றை கையாண்டுள்ளது.

மத்திய வர்த்தகத்துறையின் இணைந்த அலுவலகமாக டி.ஜி.டி.ஆர். செயல்படும். வர்த்தகத்தில் ஆண்டி டம்பிங், வரிசெலுத்தாமை போன்ற பிரச்சனைகள் தொடர்பாக டி.ஜி/டி.ஆரின் பரிந்துரைகளை வருவாய்த்துறை கையாளும்.

*www.phdcci.in*

# மீனவர்களுக்கு உபகரணங்கள் மற்றும் செய்முறை விளக்கம்

## ஆழியார் நீர்த்தேக்கம், தமிழ்நாடு

தமிழகத்திலுள்ள ஆழியார் நீர்த்தேக்கப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு செட்யூல்டு டிரைப் காம்பொனண்ட் எனும் திட்டத்தின் கீழ் அத்தியாவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஏப்ரல் 18,2018ல் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு ஃபிஷ்சரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேசனைச் சேர்ந்த பிரதிநிதிகள், ஐ.ஐ.எ.ஆர்.-சி.ஐ.எஃப்.டி.யைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மற்றும் திரளான மீனவர்கள் கலந்து கொண்டனர். திரு.கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் மற்றும் மேலாளர் டி.என்.எஃப்.டி.சி. கூட்டத் தினரை வரவேற்றார். திரு.வி.சந்திரசேகர், விஞ்ஞானி, ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. இந்த திட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறினார். மீன் உற்பத்தியை அதிகரிக்க தரமான ஜில்நெட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். தரமான பிஷ்சிங் கியர், கோரக்கில்ஸ், எடை மேடை, மிதவைக் கவசம் போன்றவை ஆழியார் பகுதியில் செயல்படும் மீன்பிடிக்கும் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.

